# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 — விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2003, புரட்டாதி 8 உ (24-9-72) ஞாயிறு 1391 ஷஃபான் 15 புத்தகம் 25 இதழ் 43


### மீன் பாடும் தேனாட்டில்

# தமிழர் கொடி உயர்ந்தது!

## உதயசூரியன் உரிமைக் கொடியை தந்தை செல்வா ஏற்றிவைத்தார்!

ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் உன்னத சின்னமாக விளங்கவிருக்கும் உதய சூரியன் கொடி மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இத்திங்கள் 17-ஆம் நாள் முதன் முதலாக ஏற்றப்பட்டது.

சிவப்பு வண்ணத்தில் பொன்னிற உதய சூரியன் பொறிக்கப்பட்ட தமிழர் கூட்டணியின் இக் கொடியை கிரானில் நடைபெற்ற தமிழர் கூட்டணிக் கூட்டமொன்றில் தந்தை செல்வா அவர்கள் மக்களின் பலத்த கரகோஷத்திடையே உயரப் பறக்கவிட்டார்.

தமிழர் கூட்டணியைச் சேர்ந்த சகல பா. உ. க்களும், பிரமுகர்களும் இக்கொடியேற்று வைபவத்தில் கலந்துகொண்டனர். இ. தொ. காங்கிரஸ் சார்பில் திரு. மருதப்பிள்ளை கலந்துகொண்டார்.

அக்டோபர் 2ஆம் நாளே இக்கொடியை ஏற்றுவது என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும் இம்மாதம் 17 ஆம் திகதியே கொடிஉயர்த்தப்பட்டு விட்டது.

---

### அக்டோபர் 2ல்

## தீவிர ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பமாகும்!

### திட்டவிவரங்கள் செப்.30ல் வெளியிடப்படும்!

திட்டமிட்டபடி தமிழர் கூட்டணியின் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான போராட்டத்தை காந்தியடிகள் பிறந்த தினமான அக்டோபர் 2ல் ஆரம்பிப்பது என செங்கலடியில் கூடிய தமிழர் கூட்டணி நடவடிக்கைக்குழு முடிவு செய்துள்ளது.

தமிழர் கூட்டணியின் போராட்டம் ஒத்துழையாமை, சட்டமறுப்பு ஆகிய இரு அம்சங்களைக் கொண்டதாக இருக்கும். முதலில் ஒத்துழையாமை இயக்கமே ஆரம்பமாகும். இந்த இயக்கம் சிறிது சிறிதாக விரிவடைந்து கொண்டே போகும்.

ஒத்துழையாமைப் போராட்டத்துக்கான திட்டங்களை செப்டம்பர் 30ம் திகதி தமிழ் ஈழத்தின் மாவட்ட தலைநகரங்களான யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பொதுக்கூட்டங்களை நடத்தி மக்களுக்கு விளங்கப்படுத்தவும் தமிழர் கூட்டணி முடிவு செய்துள்ளது.

தமிழ்ப்பகுதிக்கு வருகை புரியும் அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி பிடிப்பதும் இதில் ஓரம்சமாக இருக்கலாம் என்று தெரியவருகிறது.

அக்டோபர் 2 முதல் ஆரம்பமாகவிருக்கும் ஒத்துழையாமை இயக்கத்தின் முதல் நடவடிக்கையாக அன்றையதினத்தை ஒரு பிரார்த்தனை தினமாக கைக்கொள்ளுமாறு தமிழர்கூட்டணி தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அக்டோபர் 2ல் தமிழ் மக்கள் எவரும் தத்தமது வீடுகளைவிட்டு வெளியேறக் கூடாதென்றும் கடைகளை மூட வேண்டுமென்றும் பாடசாலைகளை மாணவ மாணவியர் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும், பெரியவர்கள் வேலைத்தலங்களுக்கு செல்லக் கூடாதென்றும் தமிழர் கூட்டணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

---

## யூ. என். பியும் தமிழின் எதிரியே!

தமிழ் மொழிக்கு இந்நாட்டில் உரிமை வழங்கப்படக்கூடாதென்பதில் இன்றைய முக்கூட்டணி அரசுக்கு கிஞ்சிற்றும் சளைத்ததல்ல யூ. என். பி. என்பதும்-தமிழர்களைப் பொறுத்தவரை, யூ. என். பி. யும், ஆட்சியிலுள்ள கட்சிகளும் ஒரே குட்டையிலூறிய மட்டைகள் என்பதும் தமிழ் மக்கள் அறிந்ததே.

அதை மேலும் ஊர்ஜிதமாக்கும் வகையில் இதோ ஒரு சம்பவம். கொழும்பு மாநகரசபையின் நிர்வாகத்தில் தமிழும் இடம்பெற வேண்டுமென்று கொட்டாஞ்சேனை மேற்கு வட்டார உறுப்பினர் திரு. ஹரிஸ் விக்கிரமதுங்க மாநகரசபையில் அண்மையில் ஓர் பிரேரணை கொண்டுவந்தார்.

இந்தப் பிரேரணையை எதிர்த்து தமிழுக்கு இடம் கொடுக்கக்கூடாதென்று வாக்களித்திருப்போர் யார் தெரியுமா? அனைவரும் யூ. என். பி. கட்சியைச் சேர்ந்த மாநகர சபை உறுப்பினர்களே!

---

## திருமலையில் தமிழர் கூட்டணி உறுப்பினர்கள் கைது!

திருகோணமலையில் தமிழர் கூட்டணியைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் பொலீசாரால் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் கழக செயலாளர் திரு. ஈழத்துநாதன், திரு. வீரசுப்பிரமணியம் திரு. துரைராசா, திரு. விஸ்வப்பா ஆகியோரே கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் ஆவர்.

இதனையடுத்து திருகோணமலை இளைஞர்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

---

## பாரபட்சம் பாரபட்சம்!! பட்டியல் இதோ....!

சோசலிசம், சோசலிசம், என்று நாள்தோறும் மேடைக்கு மேடை தமுக்கடித்துவரும் இன்றைய முக்கூட்டு ஆட்சியாளர்கள், அரசாங்கசேவைகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதில் எவ்வளவு தூரம் அப்பட்டமான பாரபட்சம் காட்டுகின்றனர்—தமிழர்களை ஒதுக்கி வருகின்றனர் என்பதற்கு இதோ சில உதாரணங்கள்!

### எக்ஸ்ரே தொழில்நுட்ப பயிற்சியாளர்கள் (Radio Graphers)

1970ம் ஆண்டு நவம்பர் மாதம் மேற்படி பதவிகளுக்கு 25 பேர் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்டவர்கள் அனைவருமே சிங்களவர்கள்.

தெரிவுசெய்யப்பட்ட இந்த 25 பேரில் 5 பேர் வேலைக்குத் திரும்பவில்லை. இந்த ஐந்து இடங்களுக்கும் புதியவர்கள எடுக்கப்பட்டார்கள். இதில்4பேர் சிங்களவர்கள் — ஒரே ஒருவரே தமிழர்.

### சோசலிசமாம் சோசலிசம்...!

1972ம் ஆண்டு மேற்படி வேலைக்கு பயிற்சிகால சம்பளத்துடன் முதலில் 20 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். இந்த 20 பேரில் 19 பேரும் சிங்களவர்கள். ஒருவர் இஸ்லாமியர். தமிழர் எவருமே இல்லை.

இதன்பின், 10 பேர் பயிற்சி காலத்தில் சம்பளமில்லாத முறையில் தெரிவுசெய்யப்பட்டனர். இந்தப் பத்துப் பேரிலும் 9 பேர் சிங்களவர்கள்— ஒருவரே தமிழர்.

இந்த வேலைக்கு இன்னும் ஒன்பது காலி இடங்கள் உண்டென்றும், பயிற்சிக்காலத்தில் சம்பளத்துடன் கூடிய 4 இடமும் சம்பளமற்ற 5 இடங்களும் நிரப்பப்படவேண்டியுள்ளனவென்றும் தெரிகிறது.

### MEDICAL LABORATORY TECHNOLOGISTS

மேற்கண்ட வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் வேலைக்கு 1970ல் 30பேரும், 1972ல் 30 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர். அனைவருமே சிங்களவர்கள் — ஒருவராவது தமிழர் இல்லை.

### PHYSIOTHERAPISTS

இயன் மருத்துவர்

மேற்படி வேலைக்கு 1970ல் 27 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இதில் 25 பேர் சிங்களவர்கள்— 2 பேரே தமிழர்கள். 1972ல் 30 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இதில் 28 பேர் சிங்களவர்கள்— 2 பேரே தமிழர்கள்.

தமிழினத்துக்குஎதிராக எவ்வளவு தூரம் பகைமையும் பாரபட்சமும் சிங்கள சோசலிச அரசு காட்டி வருகின்றது என்பதற்கு இது போதுமல்லவா? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போதுமல்லவா?

---

**உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் சிறையில் இன்று 107வது நாள்!**

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில்மோகம் தமிழனிடமிருந்து அறவே ஒழிய வேண்டும்!

## அன்னைத் தமிழை அன்றுடம் பயன்படுத்துவோம்!

### தமிழை வாழ வைப்பது நம் கையிலேயே உள்ளது!

இலங்கையில் குடியரசு என்னும், தமிழர்களைப் பொறுத்தவரையில்கொடிய அரசு தோன்றிவிட்டது. மே 22ந் திகதி தமிழ் மக்கள் ஈழத்தமிழ்ப் பகுதிகளில் தம்மால் இயன்ற வரையில் கறுப்புக்கொடிகள் கட்டியும் கடைகளை அடைத்தும் தம் எதிர்ப்பை அகில உலகுக்கும் எடுத்துக் காட்டி விட்டார்கள்.

ஒருசில தமிழ் பா. உ.க்கள் புதிய குடியரசை ஆதரித்துக் கையெழுத்துப் போட்டுவிட்டதால், தமிழர்கள் எல்லோரும் இதனை ஆதரிக்கிறார்கள் என்று அரசாங்கம் நினைத்தால், அதைவிடப் பெருந்தவறு வேறு இருக்கமுடியாது. எனினும் இன்றைய நிலையில் ஈழத்தில் வசிக்கின்ற தமிழ் மக்களுக்கு தம் மொழியின்மேல் மேலும் பற்று ஏற்படும் வரையில் முயற்சிகள் செய்யப்படல் வேண்டும்.

தமிழ் மக்கள் தமது மொழியான தமிழ்மொழியில் மட்டுமே அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை உருவாக்கப்படல்வேண்டும். சிங்களம் மட்டும் அரசியல் சட்டமாக இருக்கலாம். நாம் தமிழ் மட்டும் என்பதனை எமது கொள்கையாகக் கருத வேண்டும். ஒவ்வொரு தமிழனும் இதனை ஒரு முக்கியமான பிரச்சினையாகக்கருதி சாத்தியமான எல்லாவழிகளிலும் தமிழ்மொழியை உபயோகப்படுத்த முயல வேண்டும்.

இன்று நாம் எத்தனையோ அலுவல்களைத் தமிழில்செய்யக்கூடியதாயுள்ளது. ஆனல் பெரும்பாலான தமிழர்கள் ஆங்கிலம் படித்த தமிழர்கள் தமிழில் அலுவல்களைச் செய்வதைக் கேவலமாகக் கருதுகிறார்கள். எனவே தொடர்ந்தும் ஆங்கிலத்திலேயே தமது ஆலுவல்களைச் செய்துவருகிறார்கள். நாடு குடியரசாகி சிங்கள மொழி உரிய இடத்தைப் பெற்று, தமிழ்மொழி தள்ளப்பட்டதைக் கண்ட பின்புங்கூட இவர்கள் ஆங்கில மொழியை கட்டிப்பிடித்திருப்பதைக் கண்டு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை.

ஆங்கிலத்தைப் படிக்க வேண்டாம் என்று கூறவில்லை. ஆனல் எமது மொழி இலக்கிய வளமுள்ள இனிய மொழி, பழையமொழி. ஆனல் இன்று இங்கே உரிமையற்றமொழி. அந்த மொழியில் தபால் முகவரி

**தமிழ்ப் பித்தன்**

களைக்கூட எழுதத் தயங்கும் தமிழர்கள் இருக்கிறார்கள். தமிழில் கையெழுத்துப் போடத் தெரியாமல் தமிழர்கள் என்ற பெயரில் உலாவுகின்றவர்களும் இருக்கிறார்கள்.

ஆங்கிலம் தெரிந்த தமிழர்கள் இதைப் பற்றி நன்றாகச் சிந்திக்கவேண்டும். காலனித்துவ ஆட்சி எம்மை விட்டுப் போய் 25 வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் ஏன் ஒரு தமிழன் அன்றுட வேலைகளைச்செய்ய ஆங்கிலத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று புரியவில்லை.

காலையிலே ஒரு சிங்களவன் இன்னொரு சிங்களவனைப் பார்த்து அல்லது தமிழனைப் பார்த்து ''ஆயுபொவன்'' என்று கூறுகிறான். ஆனல் அதே நேரத்தில் ஒரு தமிழன் அடுத்த தமிழனைப் பார்த்து ''குட் மோர்ணிங்'' என்கிறனே தவிர அழகுதமிழில்வணக்கம் என்று கூறத் துணியமாட்டான். இதே போலத்தான் எல்லா விடயங்களிலும் ஆங்கிலத்துக்குக் கொடுக்கும் முதலிடத்தை தனது தாய் மொழியான தமிழுக்குக் கொடுக்கப்பெரிதும் தயங்குகிறான்.

''நன்றி'' என்ற நல்ல வார்த்தை இருக்க 'தாங்யூ' சொல்கிறோம் ஐயா என்று அழகு தமிழில் கூறவேண்டிய நேரத்தில் 'சேர்' போடுகிறோம். ஆனல் சிங்கள மகன் ஒருவன் மாத்தயா என்றே கூறுகிறான். அவர்களின் மொழிப்பற்றுக்கும், மொழியுணர்ச்சிக்கும் நான் தலைவணங்குகிறேன்,

தங்கள் மொழியைத் தாங்களே வளர்க்கவேண்டும் எல்லாத் துறைகளிலும் தங்கள் மொழி வளம்பெற்றதாக இருக்கவேண்டும் என்று ஒவ்வொரு சிங்கள மகனும் நினைக்கிறான். இதனல் கடந்த இருபத்து ஆண்டுகளில் அம்மொழி எவ்வளவோ வளர்ச்சி அடைந்துவிட்டது. ஆனல் தமிழ்பெருமக்களோ தம்மொழியைப் பற்றிச் சிந்திக்காமல், வாயளவில் மட்டும் பேசி ஆங்கிலத்தையே இன்னும் கட்டிக்கொண்டு அழுகிறார்கள்;

ஓரளவுக்கு ஆங்கிலம்தெரிந்த தமிழன் தன் ஆங்கில அறிவைக் காட்டவேண்டும் என்ற போலிப் பெருமித உணர்வில் நேரம் என்ன தம்பி? என்று தமிழில் கேட்கக் கூடியதாக இருக்க ''வட் இஸ் த ரைம்'' என்று கேட்கிறான். இவ்வாறன நிலைமுற்றாக மாற்றப்படவேண்டும். தமிழர்கள் கூடிய வரையில் தமிழிலேயே பேசவேண்டும். தமிழிலேயே எழுத வேண்டும். பொதுமக்களின் உபயோக மொழியாகத் தமிழ் தொடர்ந்து நீடிக்க வேண்டுமானல் நாம் ஆங்கிலத்தை எல்லாக் காரியங்களுக்கும் உபயோகிக்கும் நிலையிலிருந்து விடுபடவேண்டும்.

இன்றைய தமிழ் அரசாங்க ஊழியர்களில் கணிசமான அளவினர் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் சேர்ந்தவர்கள். இவர்களால் தமிழில்வேலைசெய்ய இயலாது. இவர்கள் முற்றாக ஆங்கிலத்திலேயே வேலைசெய்து பழகிவிட்டவர்கள். ஆனல் 1956ம் ஆண்டின் பின்னர் அரசாங்க சேவையில் சேருபவர்கள் தமிழ் அல்லது சிங்கள மொழியிலேயே சேருகிறார்கள். இவர்களில் தமிழ்மொழி மூலம் சேருபவர்கள் மூன்று ஆண்டு காலங்களுக்கு தகுதி காண் நிலையில் வைக்கப்பட்டு, பின்னர் சிங்களம் எட்டாம் வகுப்புத் தகைமை அடைந்ததும் பதவியில் உறுதிப்படுத்தப் படுவதுடன் சம்பள உயர்வுகளையும் பெறுகிறார்கள்.

தகுதிகாண் நிலையில் வைக்கப்படும் மூன்று ஆண்டுக் காலமும், தமிழ்மொழி மூலம் சேர்க்கப்பட்ட இந்த புதிய தமிழ் அரசாங்க ஊழியர்கள் தமிழில்வேலைசெய்வதில்லை. ஆங்கிலத்தில் மட்டுமே வேலைசெய்கிறார்கள். கந்தோர்களில் உள்ள தினவரவைப் பதிவுசெய்யும் இடாப்பில்கூடத் தமிழில் கையெழுத்து வைக்கத் தயங்குகிறார்கள். தனது சொந்தக் கையெழுத்தைத் தமிழில் வைக்கவே பயப்பட்டு அஞ்சி நடுங்கும் அளவுக்கு அவர்கள் பயப்படுகிறார்கள். இவர்களுக்கு இவ்விதமான பயம் ஏற்படுவத

(7-ம் பக்கம் பார்க்க)

**தமிழியக்கம்**

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

## 'இருந்தமிழே நீ வாழ்க' (வெல்லவூர்க் கோபால்)

[அண்மையில் கொம்மாதுறை விபுலாநந்த படிப்பகத்தினரால் நடாத்தப்பட்ட கவியரங்கில்பாடப்பட்டது]

ஊனாய் உயிராய் உடலாய் உளமாகி
தேனாகி வாழ்விநற் சிறப்பாகி — தோணுமுயர்
அருந்தமிழே உந்தன் அடிதொட்டுப் பாடவந்தேன்
இருந்தமிழே வாழ்க இனிது.
வெண்பாவின் மேம்பாட்டில் வெறிக்கும் தமிழமுதம்
தென் தமிழின் திருவேட்டில் சேராத்தனிநிதியம்
என்றாலும் எனதுள்ளம் ஏறும் உயர்தீபம்
சென்றாலும் செல்லாது தீராத நற்பாசம்.
நாடு செழிப்புற்று நற்றமிழர் வாழ்வதற்கு
வீடுதோறும் வேண்டும் வெல்லத் தமிழ்ச் சேவை
பாடிப்படித்து படித்தபடித்தான் நடந்து
நாடிப்பணிபுரிய நாம் முனைந்தால் அதுவே
நல்லதமிழ்ச் சேவை நாடறியும் நற்சேவை
வெல்லத் தமிழ்ச் சேவை நாடறியும் நற்சேவை
வெல்லத் தமிழ்ச் சேவை விழாவெடுக்கும்
பெரும்சேவை

ஈழத்தின் கீழ்ப்பால் எழுமுதய ஞாயிறுபோல்
பாலோடு தேனும் பாடும்மீன் பண்ணிசையும்
வாழப் புகழ் சிறக்கும் மட்டுநகர் மண்ணிருந்து
சாலத்தமிழ் நாடு தானேகி அன்றொருநாள்
கையில் குறளெடுத்து கன்னித் தமிழ் சுவைத்து
மெய்யெல்லாம் நோக 'மெட்ராசை' சுற்றிவந்து
பைய அமர்ந்து பரிதவித்தேன் இஃது ஐயா
பொய்யல்ல நற்பொதிகை மாமலையே என்றறிந்து
வாரும் தமிழ் கவிஞ! வரவேண்டும் தங்களுக்கு
சேரட்டும் பல் வளமும், செந்தமிழில் நல்வாழ்த்தும்
கூறுகின்றேன், ஏற்றிடுக! குலக்கொடியாம் என்மகளை
காண விளைகின்றீர் காதலினல் கட்டுண்டீர்
வீணுக உந்தனுடன் விளையாடுதல் கொடிது
ஆனதினல் எந்தன் அழகு மலர்க்கொடியை
காணலாம் என்றே கவின்றார் அகத்தியனர்.
காலில் சிலம்பொலிக்க கையில் வளையார்ப்ப
மேனியெல்லாம் குறளின் மென்மை ஒளியூட்ட
மேகலையும் குண்டலமும் மேன்மை மிகுசிந்தாமணியும்
அகமும் புறமும் அழகாய்ச் சதிராட
காவியங்கள் ஓவியங்கள் கவினுறு நற்கலைகள்
இலக்கண இலக்கியங்கள் இதிகாசங்கள் பலவும்
தோன்றிடவே எந்தன் சுந்தரியாள் வருவாள்
வேண்டுமட்டும் காதல் விளையாட்டில் மூழ்கிடலாம்
என்றே பலவாறு எண்ணித் தவித்திருந்தேன்
சிந்தனையாள் நெஞ்சம் இளைத்தே துடித்திருந்தேன்
ஓசையும் கேட்கவில்லை உருவும் தெரியவில்லை
பாசமெல்லாம் விடுத்து பாவிமகள் மறந்தாளோ
எண்ணிறந்த காதலர்கள் ஏற்றிவைத்த அவளுள்ளம்
என்னை மறந்ததுவோ எனக் கோபக் கனல் கக்க
பின்னே திரும்புகிறேன் பேரிடியோ! ஐயய்யோ!
என்னே கொடுமையிது எனதன்புக் காதலியாள்
அன்னைப் பெருங்குலத்தின் அழகுத்
தமிழ்க்கொடியாள்
அணிமணிகளின்றி அலங்காரமேதுமின்றி
அழுதாள் அழுதாள் அழுதே பொருமி நின்றாள்
விம்மி அழுதாள் ஈழம் வீழ்ந்ததுவே என அழுதாள்
பொங்குமெனதுள்ளம் தீப்புழுவாய்த் துடித்திடவே
இங்கே திரும்பி வந்தேன் எனதன்புத் தோழர்களே..
ஆனல் இங்கோ......
உலக மொழிக்கெல்லாம் உயிர்மொழியாய் நின்ற
மகள்
அலைசூழும் ஈழமதில் அரசோச்சி வாழ்ந்த மகள்
தனைப்பார்த்து ......
ஆண்டுபல கோடி ஆயிற்றே இம்மடந்தை
மாண்டு மடிந்தே மண்ணாகிப் போகாளோ
கூண்டிலிடுவோம் அவளின் கூந்தல்தனை
வெட்டிடுவோம்
வேண்டியமட்டும் வருத்தி வேதனையில் சாகடிப்போம்
என்றே அரசார் இழைத்தார் பலகொடுமை
கொண்டாடிப் பார்த்தார் கொக்கரித்தார்
எக்களித்தார்
மண்டூகம் போன்ற சில வாய்ஜாலத் தமிழர்களை
கொண்டே கைப்பொம்மையென கூக்குரலிட்டே
பார்த்தார்
வடவேங்கடம் குமரி வளமார் தமிழீழம்
கடாரம் யவணம் சீனம் கிரேக்கமெலாம்
கொடி கட்டி வாழ்ந்த மகள் குலவிளக்காய் நின்ற
மகள்
தனைப்பிடித்தார் அவளின் தளிர் உடலில் தீயிட்டார்
கையில் தளையிட்டார் காலில் விலங்கிட்டார்
மெய்யெல்லாம் வருந்தி வீதியெல்லாம் இழுத்தார்
பொய்யுரைகள் சொன்னர் புகழுரையாம்
என்றுரைத்தார்
வையத்தில் மூத்தமகள் மணிமகுடம் தனைப்பறித்தார்
பார்த்து மகிழ்ந்தவர்கள் பதவி பல பெற்றார்கள்
பதறித் துடித்தவர்கள் படைதிரட்டி நின்றவர்கள்
தம்மிலே தீயிட்டு தமிழ் மானம் காத்தவர்கள்
மெய்யெல்லாம் தளர வெஞ்சிறையில் நொந்தவர்கள்
ஏராளம் ஏராளம் ...... இங்கிதனல்
என்னத்தைக் கண்டார்கள் இருந்தமிழே நீ
வாழ்ந்தாய்!
உன்னை அழித்திடவோ ஒருக்காலும் முடியாது
உண்மை எனினும் ஒருவார்த்தை உந்தனுக்கு
செந்தமிழ்த் தோழரே! திராவிடச் சிங்கமே!
உன்னைத்தான் ஒன்று உரைக்கின்றேன் எனைப்பாராய்
ஆண்டாண்டு காலமாய் வாழ்ந்தோம் மண்ணில்
ஆனல் எம் விடுதலை நாள் எப்போ எப்போ
தாண்டிவிட்டோம் எல்லையை நாம் அடிமையில்லை
சத்தியமே எஞ்ஞான்றும் நாட்டில் வாழும்
கூண்டிலிட்டு தமிழ்த்தாயை பூட்டொணாது
குமரகுரு பரனை கூறுகின்றேன்
மாண்டுதான் உரிமை பெறவேண்டுமென்றால்
மறுதுடைக்க விரையட்டும் மறவர் கூட்டம்
என்றே இதயத்தில் எழுப்பியுள்ள கோட்டைதனை
உந்தன்முன் வைத்தே உரிமையுடன் செல்கின்றேன்
கோட்டை அழியாது குலதெய்வம் நம் தமிழ்த்தாய்
ஆட்சிபுரிய நீ அரசாக நின்றிடுவாய் ......

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அயர்லாந்து நடத்திய விடுதலைப்போர்

# ஈழத்தமிழனுக்கு ஆதர்ஸமாகத் திகழட்டும்!

## 300 ஆண்டுகளுக்கு விடாப்பிடியாகப் போராடி

### பலலட்சம் பேரைப் பலியிட்டு விடுதலைபெற்றது அயர்நாடு!

கொந்தளிப்பு நிறைந்த வேகமான விடுதலைப் போராட்டங்களைத்தான் மதிப்புக்குரிய புரட்சி என்று வரலாறுகள் புகழ்பாடுகின்றன. தன்னின எழுச்சியின் ஆழத்திலே இருந்து வெடித்துச் சிதறும் இன எழுச்சி மொழி உணர்ச்சி போன்ற புரட்சிகளுக்குத்தான் மனித இனத்தின் மேம்பாடு மதிப்பளித்துப் புகழ்பாடுகின்றது. ஒடுக்கப்பட்ட இனமும்— அடக்கியாளத் துடிக்கும் அரசும் அன்று தொட்டு இன்று வரை ஓயாது களம் கண்டுதான் வருகின்றன. அதிலே ஒன்றுதான் விடுதலை போர் வரிசையில் இன்று எம்மைப் போன்று—அன்று அடிமைப்பட்ட அயர்லாந்தும்.

அடக்கப்பட்ட இனங்கள் அதுவே தஞ்சம் என்று சோர்ந்து கிடந்து வாழவில்லை. அடக்கி வாழத் துடித்தவர்களால் நிரந்தரமாக வெற்றிகாண வே முடியவில்லை. களமும் கல்லறைகளும் தரும் இரத்த வரலாறு இது. இன்று தமிழினத்தின் விடுதலை உலையால் புரட்சி என்ற இன எழுச்சித் தீ கொழுந்து விட்டெரிந்து கொண்டேயிருப்பதைப் போன்று — தமிழினத்தின் சிந்திய உதிரத்தால் சிங்கள ஆதிக்கபுரியினர் தனிச் சிங்களச் சட்டத்திற்கும் ஒற்றை ஆட்சிக்கும் அபிஷேகம் செய்து வருவதைப்போன்று தான் அன்று அயர்லாந்து மக்களும் பிரிட்டனால் பிழிந்தழிக்கப்பட்டுக்கொண்டிருந்தனர்.

### விடுதலை என்பது கடைச்சரக்கல்ல

விடுதலை என்பது விரல் அசைவிலோ — விலைகொடுத்தோ கிடைக்கக் கூடிய ஒரு பொருளல்ல — தியாகங்கள் பல புரிந்து விழுப்புண்கள் பல ஏற்று—களம் பல கண்டு — கல்லறைகள் லட்சோபலட்சம் கடந்து பெற்றுத் தீரவேண்டிய ஒன்றுதான் புனிதமான இவ்விடுதலை. காலங்கள் வேகமாக உருண்டோடலாம். கவலையில்லை. கொண்ட கொள்கையில் நம்பிக்கையும் — சகிப்புத்தன்மையும் — தியாகமனப்பான்மையும்—இருந்தால் நிச்சயமாக அந்த இனம் தடைகள் பல உடைத்து விடுதலை அடைந்தே தீரும் என்பது தான் விடுதலை வரலாறு. எதுவுமே நினைத்த நேரத்திற்குள் கைகூடி விட வேண்டுமென்பது மனிதனுடைய இயற்கையான எண்ணம் தான் ஆனால் அது அடக்கப்பட்ட மக்களின் சரித்திரத்தில் கற்பனைக்குரிய ஆசை தான் இது.

தெளிந்த பார்வையும்— திடமான உள்ளமும் — தளராத நம்பிக்கையும்—பொறுமையும், தனக்குப்பயனில்லாவிட்டாலும் தனது வருங்கால சந்ததியாருக்காவது பலனளிக்கவேண்டும் என்ற தன்னலமறுப்புப் பண்பும் — கொள்கையிலே குடியேறிய தியாகிகள் வாழும் இனம் நிச்சயமாக விடுதலை அடைந்தே தீரும். துப்பாக்கிகள் வெடித்தாலென்ன தோட்டாக்கள் பறந்தாலென்ன— குண்டுகள் வெடித்தாலென்ன எத்தனை நாளைக்கு விடுதலைப்படைக்கு அது பயன்படும். எத்தனை உயிர்களைக் குடித்து அவைகளால் ஏப்பமிடமுடியும்? தலைகள் மலையாகி—குருதி குளமாகிப் பெருக்கெடுக்கட்டும். அதற்காகக் கவலையில்லை. என்றுமே அதற்காகஒதுக்கப்பட்ட உடல்தான் — ஆனால் எங்களது உணர்வுக்கும்—உயிருக்கும் தேவை விடுதலைதான் என்று வரலாற்றிலே உலாவிய நாடுகளிலே ஒன்றுதான் அயர்லாந்து.

## இதை உணர்ந்து மனம் தளராது விடுதலைப் பாதையில் முன்னேறுவோம்!

### குடியேற்றத்தால் வெடித்த முதல் புரட்சி

புகழுக்கும்— பெருமைக்குமுரிய அம்மக்களது போராட்டம் ஓரிரு நூற்றாண்டுக் கதையல்ல. ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொடர்கதைதான் அது. 1914ம் ஆண்டு உலகப் போரைத் தொடர்ந்து அயர் நாட்டின் விடுதலைப்படை போட்டி அரசு அமைத்து— தன்னின இதயத் துடிப்பை வெளிக்கொட்டி பிரிட்டனுக்குச் சவால் விட்டது. அம்மக்களை நீண்ட நெடுங்காலமாக அடிமைப்படுத்தி ஆண்ட காரணத்தால் அந்நாட்டின் உரிமை உணர்ச்சிகள் ஒய்ந்து அழிந்து விட

**கே. எஸ். ஏ. கபூர்**

வில்லை. மாறாக அது வேகம் பெற்று கிளர்ந்தெழுந்தது.

ஜேம்ஸ் முதலாம் மன்னன் காலம், அயர்லாந்து மக்களின் விடுதலைக் கீதம் மெல்லோசை கிளப்பிய நேரம். இங்கிலாந்து மக்கள், அயர் மக்களின் கலை, மொழி, இலக்கியம் பண்பாடு, வீரம் ஆகியவைகளை அருவருப்போடு வெறுத்தொதுக்கினர். மதிப்பதற்கு பதிலாக மிதித்தனர். நிலப்பிரச்சினை அயர் புரட்சியின்மையமாக விளங்கியது. 1641ல் முதன் முதலாக வெடித்த புரட்சியை இங்கிலாந்து மிருகத்தனமாக அடக்கியது. இதைத் தொடர்ந்து 'கிராம்வெல்' காலம் வந்தது. இவரது கடுமையான நடவடிக்கைகளும் தண்டனைகளும் அயர் மக்களின் உரிமை உணர்வைத் தட்டி எழுப்பியது. புரட்சிக்காரர்கள் என்ற பெயரோடு பல தலைகள் — தொண்டர்கள் மிருகத்தனமாகத் தூக்கிலிடப்பட்டனர். பெரும்பகுதியினர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர். இதனால் புரட்சித் தீ தணியவே ஆங்கிலேயர் தன்னிஸ்டம் போல் அயர் மீது பேயாட்டமாடினர். மொத்த ஜனத் தொகையில் 1/3 பகுதி மக்கள் வறுமையிலும்— மிருகத்தனமான அடக்கு முறைகளாலும் மண்ணறைக்குள்ளானார்கள்.

### பயங்கரச் சட்டங்கள்

அயர் மக்கள் கத்தோலிக்கர்கள். ஆனால் இங்கிலாந்து மக்கள் புராட்டஸ்டன் மதத்தைச் சார்ந்தவர்கள். இப்படி மதத்துறைகளில் மட்டுமல்லாது சகல துறைகளிலுமே அவர்களிடம் நீண்ட பெரும் இடைவெளியிருந்தது இதனால்தானே என்னவோ — இரண்டாம் மன்னன் 'சார்லஸ்' ஆட்சிக் காலத்தில் மனித தர்மத்துக்கப்பால் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஓட்டுரிமை —உயர் பதவிகள்—பல்கலைக் கழக, கல்லூரி, பள்ளிக்கூட உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டன. புராட்டஸ்டன் மதத்தைச்சேர்ந்தபெண்ணை மணக்கத்தடை...

ஒரு கத்தோலிக்க குடும்பத்தில் மூத்தமகன் புராட்டஸ்டன் என்றால் சொத்துக்கள் முழுவதும் அவனுக்கே என்ற சட்டம். பொதுக்குளங்கள் கத்தோலிக்கருக்கு இல்லை என்றும் மறுக்கப்பட்டது. கோயில்களில் மணி ஒலி முழங்கக்கூடாது. ரஷ்யாவில் சார் மன்னன் போலீஸ் மக்களை நிர்மூலமாக்கக் கையாண்ட வழிமுறைகளை விட — சர்வாதிகாரி ஹிட்லர் நாஜிகளை அழித்தொழிக்கத்துணிந்த மிருகத்தனத்தை விட ஒருபடி மேலாகவே அயர் மக்கள் வேரறுக்கப்பட்டு வந்தனர். இந் நிலையில் அயர் மக்கள் கொதித்தெழுவது இயற்கைக்குட்பட்டது தானே!

புரட்சி மீண்டும் உருவெடுத்தது. அடக்குமுறைகளின் ஈவிரக்கமற்ற கொடுமை தெளிவாகத் தெரிந்தது. தங்களது இனம் —விடுதலை —தனித்தன்மைகளெல்லாம் எப்படி கபளீகரம் செய்யப்படுகிறது என்ற ஆவேசமான உணர்வு அயர்மக்களை மேலும் ஆர்த்தெழச் செய்தது. அதனால் மீண்டும் ஆயிரமாயிரம் கல்லறைகளை அயர் மக்கள் கண்டனர். என்றாலும் அவர்கள் தம் துணிவையும் — நம்பிக்கையும் கைவிடவில்லை.

### கொடுமையான வரி விதிப்பு

அயர் நாட்டின் மாடுகளும் கம்பளங்களும் உலகப் பிரசித்தி பெற்றவை. ஆனால் இவைகளை இங்கிலாந்துக்குத்தவிர வேறு எந்த நாட்டுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடாது. இக்கம்பளங்களுக்கு அதிகப்படியான வரியினை விதித்ததினால்— அதன் விளைவு அயர் தொழிற்சாலைகள் பல மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. நிலத்துறையில் இடைத்தரகர்களின் தாக்கம் ஏழை விவசாயிகளைப் பிழிந்தெடுத்தது. இப்படி ஒன்றல்ல — இரண்டல்ல ஆயிரமாயிரம். இந்நிலையில் இந்திய உபகண்ட விடுதலை போராட்டக்கனல் இருண்ட ஐரோப்பாவை பற்றிப் பிடித்ததைப் போன்று— அன்று 18ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுந்த அமெரிக்க சுதந்திரப்புரட்சி அயர் மக்களைப் புடைத்தெழச் செய்தது. அமெரிக்கப் புரட்சியின் விழி பேசிற்று; வழி தெரிந்தது. 18ம் நூற்றாண்டின் முதல் பாராளுமன்றப் புரட்சித் தலைவனாக ஹென்றி கிரேட்டன் கொடி உயர்த்தினான். தலைசிறந்த பேச்சாளன் கிரேட்டன் புரட்டஸ்டன் என்றாலும் அயர் மக்களின் அடக்குமுறைகளைக் காணச்சகிக்காமல் அம்மக்களின் விடுதலைக்காக உழைத்தான். அயர்லாந்து கத்தோலிக்கர்கள் அடிமையாகவே இருக்கட்டும். ஆனால் புரட்டஸ்டன் விடுதலையோடு வாழக்கூடாது — அப்படி தாங்கள் விடுதலையோடுதான் வாழவேண்டுமென்றிருந்தால் அயர் மக்களுக்கும் அந்த உரிமையைக் கொடுக்கட்டும் என்று முழங்கினான்.

### புரட்சிக்கேற்ற புது இயக்கங்கள்

புரட்சியை மேலும் தீவிரப்படுத்தி வலுப்படுத்த 'ஐரிஸ்தொண்டர் படை'' என்ற இயக்கம் உருவாயிற்று. சுதந்திரப் பாராளுமன்றம் தேவை என்பதே இவ்வியக்கத்தின் மூல முழக்கமாக அமைந்தது. சுதேசிப் பொருள் உற்பத்தி உணர்வும் மக்கள் மத்தியிலே ஊட்டப்பட்டன. 1792ல் வுல்ப்டோன் என்பவர் மிகமிகத் தீவிரவாதக்கொள்கையுடைய கட்சி ஒன்றை அமைத்தார். இவர் இங்கிலாந்துடன் சகல தொடர்புகளையும் துண்டித்துக் கொண்ட தனி நாடு பிரகடனத்தை வற்புறுத்தினார். இதே நேரத்தில் லார்ட் பிஜிரால்ட் என்பவர் தேசிய ஐரிஸ் மக்கள் கட்சி என்ற ஒன்றைத்தொடக்கினார். போராட்டங்களும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருந்தன. 1798ல் புரட்சி புத்தேகத்தில்போராடினாலும் வெற்றி கிடைக்கவில்லை. அத்தோல்வி புதிய ஊக்கத்திற்

(7-ம் பக்கம் பார்க்க)

---

## பூத்ததடா தமிழ் ஈழம்

— கவிஞர் காசி ஆனந்தன் —

குங்குமச் செங்குருதி
குளித்து வந்தான் எழுபரிதி !
தங்கத் தழல் ஒளியில்
பூத்ததடா தமிழ் ஈழம் !
பொங்குபோர் ஆடி வர
இளம்புலிகள் புறப்பட்டார் !
சங்கொலியும் முழவொலியும்
கேளீரோ தமிழ் மக்காள்...?
எங்கள் அருந்தமிழ் மண்ணில்
இராவணனின் பொன்மண்ணில்
அங்குலமும் இனி நாங்கள்
அயல் வெறியர் ஆளவிடோம் !
கங்குல் விலகின காண்......
எங்கள் தமிழ் மேலாணை !
தங்கத் தமிழ் ஈழம்
தமிழனுக்கே ! தமிழனுக்கே !

மூச்சுடையீர் ! தமிழரே !
முன்வாரீர் ! இனியும் வாய்
வீச்சினிலே நாள் கடத்தி
விளையாடல் வேண்டாங்காண் !
மேச்சலிலே போனதுகள்
ஆள்வோரின் தொழுவத்தில்
பூச்சி புழு வைக்கோலும்
புண்ணாக்கும் விழுங்கட்டும் !
கூச்சமுடையோம் நாங்கள்
குலமானம் ஒன்றுடையோம்...
சீச்சீ ! அடதமிழா !
சிறப்பிழந்து வாழ்வோமா ?
ஆச்சி ! உன் பிள்ளையை
ஆடவிடு போர்க்களத்தே !
போச்சுதடி பழங்காலம் !
பூத்தது பார் தமிழ் ஈழம் !

நாம் பிறந்த நம் மண்ணில்
நாமே இனி அரசர் !
கும்புகரம் இங்கில்லை !
குனிந்த தலை ஒன்றில்லை !
பாம்புக்கும் முதலைக்கும்
பணிந்து தலை வணங்கி
தேம்பி இனித் தமிழன்
திரிவதில்லை ! போர்க்களத்தில்
மாம்பழம்போல் குண்டுவரும்
மார்பிளிக்க நாம் உண்போம் !
சாம் பொழுதும் தமிழரசு
தலைநிறுவி உயிர்விடுவோம் !
ஆம் தமிழா ! அதோ பாராய்...
அரும்பியது தமிழ் ஈழம் !
மேம்பட்டான் தமிழ் மறவன் !
வீரத்தேகள் வாழியவே.

( சிறை செல்லுமுன் எழுதிய கவிதை )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## நீலிக் கண்ணீர்!

பதுளையில் நடைபெற்ற ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மாநாட்டில் உரையாற்றிய பிரதமர், இந்நாட்டுப் பொருளாதாரத்தில் தோட்டத்தொழிலாளர் வகிக்கும் முக்கிய பங்குபற்றி, விதந்து பாராட்டியுள்ளார்.

பிரதமர், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மாநாட்டில் ஆற்றியிருக்கும் உரையைப்படித்திடும் போது —கசாப்புக்கடைக்காரன் காருண்யம் பற்றிக் கதை கதையாக சுவைசொட்டிடக் கூறினல் எப்படியிருக்குமோ அப்படியிருக்கிறது நமக்கு—!

பலிக்கு நேர்ந்து விடப்பட்டுள்ள ஆட்டைக்கண்டு பலிகொள்ள காத்திருப்பவன் முதலைக்கண்ணீர் வடிப்பது போல—இந்நாட்டில் மனித உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு அரசியல் அநாதைகளாக, நாயினும் கீழாக ஒதுக்கப்பட்டிருக்கும் தமிழ்த்தோட்டத்தொழிலாளர்களுக்காக பிரதமர் 'பரிதாபப் படுகிருர்' என்ருல் அது வெறும் கபட நாடகம் என்றுதான் கூறவேண்டும்!

ஏன்? தோட்டத்தொழிலாளர்களுக்காக எந்தப் பிரதமர் கண்ணீர் வடிப்பது போல கபட நாடகம் ஆடியிருக்கிருரோ —அதே பிரதமரின் தலைமையிலான அரசுதான் தோட்டத்தொழிலாளர்களை இன்று நாயினும் கீழாக நடத்தி வருகிறது.

இந்நாட்டைத்தாயகமாகக்கொண்டு வாழ விரும்பும் சகலருக்கும் இந்நாட்டில் பூரண பிரஜா வுரிமை வழங்கப்படவேண்டும் என்ற தமிழர் கூட்டணியின் கோரிக்கையை அரசு ஏறெடுத்தும் பார்க்க மறுக்கிறது. ஏன்? மலையகத் தமிழ்த்தோட்டத்தொழிலாளர்களுக்கு மீண்டும் பிரஜாவுரிமை வழங்கி அவர்களை இந்நாட்டின் குடி மக்களாக ஏற்றுக்கொள்ள இஷ்டமில்லாததால்!

தோட்டத்தொழிலாளர்கள் தாம் இந்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்று 'ஐஸ்' வைத்திருக்கிருக்கிருர் பிரதமர். ஆனல் அதே முதுகெலும்பான தோட்டத்தொழிலாளர்கள் பதினைந்து இலட்சம் பேர் இந்நாட்டில் அடிப்படையுரிமைகள் எதுவும் இன்றி இன்று தவித்துக்கொண்டிருக்கிருர்கள். இந்தத் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு வேட்டுவைப்பதில் இன்றைய ஆட்சியாளர்கள் வெகு தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மே திங்கள் 22ம் நாள் நிறைவேற்றப்பட்டுள்ள புதிய அரசியல் சட்டத்தின்படி, தோட்டத்தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் சகலதுமே மறுக்கப்பட்டுள்ளன.

எந்த மிலேச்சத்தனமான குடியுரிமைச் சட்டங்கள் தோட்டத் தொழிலாளரின் அரசியல் உரிமைகளைப் பறித்து, அவர்களை அநாதைகளாக ஆக்கினவோ, அதே கொடூரச் சட்டங்கள் அப்படியே புதிய அரசியல் சட்டத்திலும் இடம்பெற்றுள்ளன—

இந்நாட்டுக் குடியுரிமைக்கு விண்ணப்பித்து பதிவுக்குடிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்த் தோட்டத்தொழிலாளர்களது குடியுரிமையை நினைத்த நேரத்தில் அரசு பறிமுதல் செய்யவும் புதிய அரசியல் சட்டம் வழிவகுத்திருக்கிறது.

புதிய அரசியல் சட்டத்தில் ஏனைய இலங்கைப் பிரஜைகளுக்கு அரைகுறையாக வழங்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள்கூட, பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட தோட்டத்தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது.

இந்நாட்டில் வாழும் 15 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களும், அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக-பொட்டுப் பூச்சிகளாக, புன்மைத் தேரைகளாக, உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு, அடிமைகளாக்கப்பட்டு, நாளிலும், பொழுதிலும் கண்ணீர் சிந்தியபடி தம் காலத்தையோட்டுகின்றனர்; ''கள்ளத்தோணி'' என்று ஒதுக்கப்படுகின்றனர்.

'சுப்பையாவுக்கும் வெள்ளைச் சாமிக்கும் காணி கொடுக்கமாட்டோம்; சிங்கள மக்களைத்தான் நாம் பாதுகாக்கவேண்டும். அவர்களுக்குத்தான் காணிகொடுக்க வேண்டும்—''

என்று பச்சை இனத்துவேஷமாக ஆளுங்கட்சியினர் தேசிய அரசுப்பேரவையிலேயே பகிரங்கமாக கூறுகிருர்கள்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி கிடைக்காமல் தடுப்பதற்காக நிலச் சீர்திருத்த மசோதாவையே ஆளுங்கட்சியினர் மாற்றியமைத்த வகுப்பு வெறியை இந்நாடே கண்டுகொண்டது.

இப்படியெல்லாம் செய்துகொண்டு —தமிழ்த் தோட்டத்தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளையே காலில் போட்டு மிதித்துக்கொண்டு, பிரதமர் தொழிலாளர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிருர் என்ருல்—அதில் எந்த ஒரு தொழிலாளியும் நிச்சயம் ஏமாந்துபோகமாட்டான்!

'சீனி' என்று வெறும் கடதாசியில் எழுதிவிட்டால் அது இனிக்காதென்பது தோட்டத்தொழிலாளர்களுக்குத் தெரியும்!

இந்நாட்டு மண்ணுக்காக ஓடாக உழைத்து உருக்குலைந்த மலையகத் தமிழன் விழித்தெழுந்துவிட்டான்; அவனை இனி ஏமாற்ற அலிஸ்போன்ற கங்காணிகளாலோ, அல்லது அவர்களது எசமானர்களான இன்றைய ஆட்சியாளராலோ இருபோதுமே முடியாது என்பதை மீண்டும் இங்கு கூறிவைக்கிறோம்.

# சிங்கள அரசு அதிகாரிகள்

## தமிழ் படிக்க வேண்டியதில்லையாம்!

## முக்கூட்டு அரசு இன ஒற்றுமை வளர்க்கின்ற இலட்சணம் பாரீர்!

புதிய அரசியல் சட்டத்தின் மூலம் தமிழுக்கு உரிய இடம் கொடுத்திருப்பதாகவும் மேலும் பல சலுகைகள் கொடுக்கப் போவதாகவும் பொய்ப்பறை அறைந்து கொண்டு வரும் இன்றைய கூட்டணி அரசாங்கம் இலங்கை நிர்வாகச் சேவைக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள, இனிமேல் தெரிவு செய்யப்படவுள்ள சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழுக்குப் பதிலாக ஆங்கிலத்தை இரண்டாம் பாடமாகப் படித்துச் சித்தி பெறவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கின்றது. தமிழுக்கு இந்த அரசாங்கம் உரிய இடம் கொடுத்திருப்பது எப்படி என்பது இதிலிருந்து விழங்குகின்றதல்லவா?

ஆங்கிலேயர் எம்மை ஆண்டு வந்த காலத்தில் இலங்கைச் சிவில் சேவையில் இருந்த உயர்தர ஆங்கில அதிகாரிகள்—தங்களுடைய சம்பள உயர்வுக்கும் பதவி உயர்வுக்கும் இந்நாட்டு மக்களின் மொழிகளாகிய சிங்களத்திலும் தமிழிலும் சித்தியடையவேண்டுமென்று வகுக்கப்பட்டிருந்தது.

ஆனல் இன்று சிங்கள மக்கள் இந்த நாட்டை ஆண்டு வருவதால் சிங்கள உயர் அதிகாரிகள், இங்கு வாழ்ந்து வரும் சனத்தொகையில் நாலில் ஒரு பங்குக்கும் மேலான தமிழ் மக்களின் மொழியை— இந்த நாட்டின் பழம்பெரும் மொழியான தமிழை; சிங்கள மொழி தோன்றுவதற்கு முன்பிருந்தே இந்த நாட்டில் பேசப்பட்டு வந்திருக்கும் மொழியை— தெரிந்துகொள்ளவேண்டியதில்லை என்று, தமிழுக்கு உரிய இடம் அளித்துள்ளோம் என்று பொய்த் தம்பட்டம் அடித்து வரும் இந்த அரசாங்கம், விதித்திருக்கின்றது.

இலங்கை நிர்வாகச் சேவையிலோ வேறு எந்தச் சேவையிலோ சேரும் தமிழ் ஊழியர்கள் சிங்களம் கட்டாயம் படித்தேயாகவேண்டும். என்று விதித்திருக்கும் அரசாங்கம் சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழ் படிக்கத் தேவை இல்லை என்று விதித்திருக்கின்றது. தூர தேசத்து வெள்ளைக்காரர்களாகிய ஆங்கிலேயர்களே எங்கள் நாட்டை ஆண்ட பொழுது அவர்கள் தங்களுடைய உயர்தர அதிகாரிகள் இந்த நாட்டு மக்களின் ஒரு கணிசமான பகுதியினராகிய எங்களுடைய தமிழ் மொழியையும் அவர்கள் தெரிந்திருக்க வேண்டுமென்று விதித்திருக்கும் போது எங்களுடைய சகோதரர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சிங்கள உத்தியோகத்தர்கள் எங்களுடைய மொழியை அறிந்திருக்கத் தேவை இல்லையாம்!

இது என்னத்தைக் காட்டுகின்றது?

'இந்த நாடு எங்களுக்குத் தான் சொந்தம் இதில் சிங்களவர்களாகிய நாம் தாம் ஆட்சி செலுத்துகின்றோம். அதனல் நாம் நினைத்த படிதான் ஆட்சி செய்வோம் ஆங்கிலேயர்கள் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் ... மதிப்பு ... கொடுக்க ... போவதில்லை. தேவையும் இல்லை. எங்கள் கையில் அதிகாரம் இருப்பதினல்' என்ற சிங்கள ஆட்சியாளரின் வெறியைத்தான் எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ்ப் பேசும் மக்களும் பெரும்வாரியாக வாழ்ந்து வரும் இந்த நாட்டில் சிங்களச் சாதாரண அரசாங்க ஊழியர்கள் மாத்திரமல்ல உயர்தர அதிகாரிகளும் கூட தமிழ் மொழியைத் தெரிந்து கொள்ள தேவை இல்லையென்ருல் இவர்களிடம் தனது அலுவல் நிமித்தமாகப் போகும் ஒரு தமிழ் மகன் அவர்களிடம் தனது தேவைகளை, குறைபாடுகளை எந்த மொழியில் எடுத்துச் சொல்லுவது? அவர்கள் அவனுடன் எந்த மொழியில் பேசுவது? அவர் தமிழிலும் அவர்கள் சிங்களத்திலும் ஒருவர் சொல்லுவதை மற்றவர் புரிந்து கொள்ளாமலே பேசு

**அருள்**

வதா? அப்படி என்ருல் தமிழ் மக்களுக்கு இந்த அரசாங்கத்திடமிருந்து எப்படி நீதி கிடைக்கப் போகின்றது, நியாயம் கிடைக்கப் போகின்றது.

இன ஒற்றுமை என்று இந்த நாட்டு அரசாங்கமும் எம்மில் சிலரும் கூச்சல் போடுகிருர்களே இப்படித் தான் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதோ? இன ஒற்றுமை என்று கூறிக் கொண்டு இந்த அரசாங்கம் செய்யும் எதையும் ஆதரித்து அதற்கு வக்காலத்து வாங்கும் நம்மவரில் சிலர் இதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் எல்லோரும் தம் மொழியையும் இனத்தையும் மறந்து சிங்கள மயமாகிவிட வேண்டியதுதான் இன ஒற்றுமையோ? இதைத்தான் இந்த அரசாங்கம் செயல்படுத்தத் திட்டமிட்டு நடவடிக்கை எடுத்து வருகின்றதோ? அதைத்தான் நம்மில் சிலர் தமது சொந்த நன்மைகளுக்காகவோ அன்றி அறிந்தோ அறியாமலோ விரும்புகின்ருர்களோ?

இச்சந்தர்ப்பத்தில் இது சம்பந்தமான இன்னுமொரு விடயத்தையும் இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

இந்த நாட்டில் தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்கு, தமிழுக்குச் சம அந்தஸ்தைக் கொடுக்கப்படும் வரையில், சிங்களத்தைப் படிக்கக் கூடாது என்ருல், நாம் ஆங்கிலத்தை ஏன் படிக்கவேண்டும் என்று நம்மில் சிலர் கேட்கின்றனர்.

இந்த நாட்டில் நாம் தமிழைப் பாதுகாக்கவேண்டுமென்ருல் தமிழுக்குச் சம அந்தஸ்த்துக் கிடைக்குமட்டும் சிங்களத்தைப் படியாமல் இருப்பதோடல்லாமல் தமிழை நன்ருகப் படித்து வரவேண்டும். அத்தோடு நின்றுவிடாமல் நாம் உலக மொழிகளில் ஒன்ருகிய ஆங்கிலத்தைக் கைவிடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இன்று சிங்கள மக்களைப் பாருங்கள். அவர்களுக்கு அவர்களுடைய அரசாங்கம் காட்டும் வழியைப் பாருங்கள்.

இந்த நாட்டின் இன்னெரு மொழியாகிய தமிழ்மொழியை—தங்களுடைய சிங்கள மொழியிலும் பார்க்க எல்லா வகையிலும் சிறந்த தமிழ் மொழியை — அவர்கள் படிக்க வேண்டியதில்லை என்று சொல்லும் அதே வேளையில் ஆங்கிலத்தைப் படிப்பதற்கு அவர்களுக்கு வழிவகுத்துக் கொடுக்கின்றது. உத்தரவிட்டிருக்கின்றது. எதற்காக? சிங்கள மக்கள் ஆங்கிலத்தைப் படித்து தமிழ் மக்களிலும் பார்க்க அறிவிலும் ஆற்றலிலும் திறமையாக வரவேண்டுமென்பதற்காகத்தான்.

சிங்கள மக்கள் இன்று ஆங்கிலத்தை மாத்திரமன்றி, ருஷ்ய மொழி, சீனமொழி பிரெஞ்சு மொழி. ஜெர்மன் மொழி என்று பல உலக மொழிகளைக் கற்றுவருகின்ருர்கள். பள்ளிக்கூடங்களில் பாடங்களாகப் புகுத்திப் போதித்து வருகிருர்கள். பலர் தனிப்பட்ட வகையிலும் பயின்றுவருகிருர்கள். காலக்கிரமத்தில் தங்களுடைய மக்கள் அறிவிலும் ஆற்றலிலும் தமிழ் மக்களிலும் பார்க்கச் சிறந்து விழங்கவேண்டும் என்பதற்காகவும் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளக்கூடியதாக இருப்பதற்காகவும்தான்.

ஆனல், நம்மில்சிலர் இதை உணராமல் நாம் சிங்களத்தைப் படியாமல் விட்டால் ஆங்கிலத்தை ஏன் படிக்க வேண்டும் என்று கேட்டு வருகிருர்கள்.

இது தமிழ் மக்களுக்குப் பெரும் ஆபத்து விளைவிக்கக் கூடிய வொன்ருகும்.

எங்களுடைய மாணவர்கள்—வருங்காலச் சந்ததியினர்—தமிழை நன்ருகக் கற்பதோடல்லாமல் ஆங்கிலம் போன்ற உலக மொழிகளையும் கற்கவேண்டும். அப்பொழுதுதான் தமிழ் மக்கள் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விழங்க முடியும் மற்றவர்களுக்கு ஒப்பாகவும், மிக்காகவும் திகழமுடியும்.

நாம் ஆங்கிலத்தைப் படித்தால் நம்மில் சில கைக்கூலிகள், கோடாரிக் காம்புகள், கூச்சலிடக் கூடும். அதைப் பொருட்படுத்தத் தேவை இல்லை. ஆங்கிலத்தை கற்பதால் நாம் அதற்கு அடிமையாகிவிட மாட்டோம். அவர்களுடைய கூச்சலுக்காக எமது சமுதாயத்தின் பிற்கால வாழ்க்கையைப் பாழாக்க முடியுமா? சிந்தியுங்கள் செயல்படுங்கள்.

## பண்டிதர் எழுதிய 'மனப்பால்!'

கூரவலூரர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் தேசிய பேரவையில், பிரதமரின் கொள்கை விளக்க உரைக்கு தமிழர் கூட்டணியினர் கொண்டு வந்திருந்த திருத்தங்களை ஆதரித்து விளக்கமான உரையொன்றை நிகழ்த்தியிருந்தாரல்லவா?

அந்த உரை இப்போது நூல் வடிவில் 'மனப்பால்' என்ற பெயருடன் வெளிவந்துள்ளது. இந்நூலின் விலை சதம் அறுபது மட்டுமே. தமிழன் ஒவ்வொருவனும் படிக்க வேண்டிய நூல் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைக்கு வாழ வழியில்லை இந்த நாட்டில்!

# வேலை கிடையாது அலைகிறது வாலிபர் கூட்டம்!

# விலைவாசி ஏறிவருகிறது நாள் தோறும்!

# சோசலிசம்பேசிச் சொகுசாக வாழ்கிறார்கள் அமைச்சர்கள்!

ஒரு நாடு • சுதந்திரம் அடைந்துவிட்டது என்று கூறிடுவது அந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள் சுதந்திர மக்களாக வாழ்கின்றனர் என்று கூறிடுவதற்குச் சமனானது — சரியானது என்று தான் நான் இவ்வளவு காலமும் எண்ணியிருந்தேன். இதில் எவ்வளவுதான் உண்மையிருந்தாலும் இலங்கையைப் பொறுத்தமட்டில் எனது எண்ணம் தப்பானது, தவறானது என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது. இலங்கை சுதந்திரமடைந்தது மட்டுமல்ல— அண்மையில் — ஆம், மே மாதம் 22ம் திகதி பூரண சுதந்திரம் பெற்ற நாடாக— தன்னுதிக்கம் பெற்ற ஒரு குடியரசு நாடாக—எள்ளளவும் ஏகாதிபத்தியத்தின் பிடியின்றி ஒரு பரிபூரண சுதந்திர நாடாக மாறியுள்ளது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று.

ஆனால், அதே நேரத்தில் இலங்கையில் வாழ்கின்ற மக்களுக்கு சுதந்திரத்தைப் பறிக்கும் சட்டதிட்டங்களும் — முறைகளும்— குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு அடக்கு முறைகளும் கையாளப்பட்டு வருகின்றது. அப்படியெனில் இலங்கை குடியரசானது என்பதன் அர்த்தம் என்ன?

ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு சர்வாதிகார ஆட்சியில் என்னென்ன நடக்குமோ அதையெல்லாம் நடத்தப் பார்க்கின்றார்கள். இவர்கள்! அதுமட்டுமல்ல இலங்கை ஒரு ஜனநாயக சோஷலிசக் கொள்கை கொண்ட நாடென்றும் ஆட்சியாளர்கள் அலறுகின்றார்கள்! இவர்களென்ன பித்தம் தலைக்கேறியவர்களா? அல்லது பாசாங்கு செய்து நடிக்கின்றார்களா? முன்பு தமிழ் மொழிக்காக அதன் அந்தஸ்த்துக்காகப் பாடுபட்டவர்கள்—இல்லை, பாடுபடுவதாகப் பாசாங்கு செய்த சிங்களத் தலைவர்கள் தாங்கள் முன்பு கூறியவைகளையெல்லாம் நான் அப்படிக் கூறவில்லை — இப்படிக் கூறவில்லை என்று மழுப்புகின்றார்கள்! ஆம், இவர்கள் ஒரு புதுச் சோஷலிச வாதிகளல்லவா?!

சோசலிசக் கொள்கை என்பது என்ன! ஒரு மொழி புறக்கணிப்பு — மறுமொழி பாதுகாப்பு! ஒரு இனம் அடிமையினம் — மறு இனம் ஆளுமினம்!! அடிமையினம் கூடுதல் புள்ளி பெற்று பட்டப்படிப்பு பெறவேண்டும்— ஆளும் இனம் குறைந்த புள்ளியுடன் பட்டப்படிப்பு! ஒரு மதம் அரசாங்க மதம் —மறுமதம் சம்மதம் (ஆட்சியாளர் சம்மதம் கொண்டால் மறுமதங்களுக்கும் சலுகை செய்யலாம்—செய்யாமலும் விடலாம்) சிங்களம் படிக்காத தமிழ் ஊழியர் பதவி உயர்ச்சி இல்லை — சம்பள உயர்ச்சி இல்லை—வேலை

நயினை

## நாகபஞ்சாட்சரம்

நீக்கம். ஆனால் சிங்கள அரசாங்க ஊழியருக்கோ எது வித கட்டுப்பாடுமின்றி பதவி உயர்ச்சிகள்—பட்டங்கள்—சம்பள உயர்ச்சிகள்!! இப்படிஎத்தனையோ! அடுக்கி அடுக்கிக் கொண்டு போனாலும் ஏட்டில் அடங்கா!

இதற்குத்தான் பெயர் சோசலிசமா? அப்படியெனின் இந்தச் சோசலிச முறை உலகின் வேற எந்த நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகிறது? இலங்கை தவிர்ந்த வேறு எந்த நாட்டையாவது இந்தச் சோசலிச முறைக்கு உதாரணம் காட்ட முடியுமா? ஒரு இன வெறி கொண்ட நாட்டில் கூட இப்படி நடக்குமா என்பது சந்தேகமே! எனவே போலிச் சோசலிச வாதிகளே உங்களை நினைத்திடும் போது, உங்கள் ஆளுகையினைப் பார்த்திடும்போது எமக்கு வெறுப்புத்தான் வருகிறது. நீங்கள் இலங்கையில் வாழ்வது மக்களல்ல மாக்கள் என்று எண்ணிடுவது போன்று தோன்றுகிறது. பேச்சிலே ஏமாந்த காலம் மலையேறிவிட்டது பேச்சிலேமட்டும்சோசலிசம் பேசிக் காலம் கழிப்பீர்களேயானால் இலங்கை வெகு விரைவில் பொருளாதாரப் பிரச்சினையால்தாக்கப்படும். பஞ்சம் என்ற வஞ்சப் பேய் தலைவிரித்தாடத் தொடங்கி விடும். (இப்பொழுது பஞ்சம் இல்லை என்று கூறிடவில்லை. இப்பொழுது உள்ளதை விட மோசமாக......... எழுத்தில் அதை — அந்நிலையை அடக்கிட முடியாது.) எனவே சோசலிசம்பேசுவதை விட்டு விட்டு அதைச் செயலில் காட்டுங்கள்! ஆதரிக்கிறோம்!!

ஒரு நாள் கடலில் உள்ள மீன்கள் எல்லாம் கூட்டம் போட்டன. பெரிய சுறாக்களே தலைமை தாங்கின. கூட்டத்திலே ஒரு சுறுவொன்று பேச்சை ஆரம்பித்தது. சிறிய மீன்களைப் பார்த்து 'நண்பர்களே! நாம் சகோதரத்தை நாடுகின்றோம்! ஒற்றுமையை வளர்க்கப்பாடுபடுகின்றோம். நீங்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும். பிரிந்து நின்றால் உங்களுக்கு ஆபத்துவரும். எனவே நாம் பிரிவினையை விட்டு சோசலிசமாக வாழ்வோம். ஆனால் உங்களுக்குப் பசிக்கின்றபோது எங்களைப் பிடித்துச் சாப்பிடுங்கோ. நாங்கள் எங்களுக்குப் பசிக்கின்றபோது உங்களைப் பிடித்துச் சாப்பிடுகின்றோம்' என்று கூறிற்று. ஆம், ஆம் வேடிக்கையாகத்தான் இருக்கின்றது அச்சுறாவின் பேச்சு! எப்படிச் சிறிய மீன்கள் பெரிய மீன்களைப் பிடித்துச் சாப்பிட முடியும்!! ஆனால் சுறாக்களோ......'

இதே போன்ற ஒரு சோசலிச அமைப்பொன்றைத் தான் நாம் இலங்கையில் காண்கின்றோம். எனவே நீங்கள் சோசலிசம், சோசலிசம் என்று கூறி மக்களை ஏமாற்றிய காலம் கடந்து விட்டது. உங்கள் பேச்சுக்கள் பத்திரிகைகளிற் கூட வந்தால் படிக்க மனம் விழையவில்லை. மாறாக வெறுக்கின்றது! அருவெருக்கின்றது!

1971ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த பயங்கரவாத இயக்கங்களைக் காரணமாக வைத்துக்கொண்டு இலங்கை வாழ்மக்கள் அத்தனை பேரின் சுதந்திரத்தையும் பறித்து தங்கள் கையில் வைத்திருந்தார்கள் ஒருவருட காலம். ஆம் பத்திரிகைத் தணிக்கை, அவசரகாலச் சட்டம் ஒரு வருட காலமாக நீக்கப்படவில்லை. அதாவது பேச்சுச் சுதந்திரம் எல்லாம் மக்களுக்கு கொடுக்கப்படவில்லை. இப்பொழுதும் கூட அவை சரிவர மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அப்படியெனின் இந்த ஜனநாயக முறைதான் என்னே! பத்திரிகைகளில் சில செய்திகளை வெளியிடத் தடையுண்டு அது மட்டுமல்ல அண்மையில் பத்திரிகையில் வெளிவந்த செய்தியொன்றும் எம்மை வியப்பில் ஆழ்த்தி விட்டது. 'அமிர்தலிங்கம் பேசத்தடை!' என்பதுதான் அதன் தலையங்கம். அவர் ஒரு அரசியல் வாதியாம்! எனவே அரசியல் தவிர்ந்த வேறு கூட்டங்களிலும்பேசக்கூடாதாம்! என்னே! விசித்திரம்!! இச் செய்தி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இவையெல்லாம் பேச்சுச் சுதந்திரத்தைப் பறிக்கும் செயலன்றி வேறென்ன?

அண்மையில் அண்ணன் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன் ஆகியோரைச் சிறையில் அடைத்தார்கள். காரணம்...?... இன்னும் தெரியாது! இவ்வெல்லாம் எமது சுதந்திரத்தைத்

(8-ம் பக்கம் பார்க்க)

# 'தமிழ் ஈழம்' - இன்றைய நமது

# தமிழ்க்காளையரின் இதயகீதமாகட்டும்!

கடந்த 24 ஆண்டுகளாக சுதந்திரம் பெற்றிருந்த இலங்கை மே மாதம் 22ம் திகதி குடியரசாக்கப்பட்டது. இக்குடியரசுத் திட்டத்தினால் தமிழருக்கு இருந்த உரிமைகள் அனைத்தையும் பறித்துவிட்ட அரசாங்கம் தமிழ் மக்களை ''தமிழ் ஈழம்'' அமைக்கும் நிலைக்குக் கொண்டுபோய்விட்டு விட்டது. இந்நிலைமைக்கு எம்மை ஆளாக்கிய அரசாங்கத்தையும் சிங்கள மக்களையும் பாராட்டுகின்றோம்.

எமது தமிழ் இனம் இலங்கையையே கட்டி ஆண்டது. ஆனால் இன்றோ சிங்கள ஆட்சியினரால் நசுக்கப்பட்டு வருகின்றது. எமது தமிழ்த் தாய் கண்ணீர் வடிப்பதை இனி ஒரு போதும் தமிழ் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள். எமது இனம் இரண்டாந்தரப் பிரஜையாகத் தள்ளப்பட்டதுமல்லாமல், மொழி உரிமை, குடியுரிமை, மத உரிமை போன்ற எல்லாவற்றிலும் தனது அந்தஸ்தை இழந்துவிட்டது. இதனால்தான் தமிழ் மக்கள் அநாதைகளாக்கப்பட்டுவிட்டார்கள். அநாதைத் தமிழ் மக்களுக்குப் புத்துயிர் அளித்து வாழவைக்கும் பொருட்டே 'தமிழர் கூட்டணி' மே மாதம் 14ம் திகதி திருமலையில் உருவானது. முப்பெருந் தமிழ்த் தலைவர்களால் உருவான தமிழர் கூட்டணியின் இலட்சியமாகவும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் இலட்சியமாகவும் திகழ்வதுதான் ''தமிழ் ஈழம்.''

தமிழ் இளைஞர்கள், பட்டதாரிகள் போன்றோர் அரசாங்க உத்தியோகம்பார்க்க வேண்டுமாயின் சிங்களம் படிக்கவேண்டும். ''தமிழ் ஈழம்'' அமைத்தபின் இக்கதி இருக்குமாடா தமிழா? 70ம் ஆண்டு தமிழ் மாணவர்கள் தரப்படுத்தல்மூலம் தான் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் நடக்காத நடைபெறமுடியாத அநீதியான பாரபட்சங்கள் தமிழ் மாணவர்கள் மீது பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட அநீதிகள் ஒழிய என் போன்ற இளைஞர் சமுதாயம் வேண்டுவதுதான் ''தமிழ் ஈழம்''

எப்போது திரும் எமது சுதந்திரதாகம். மொழியுரிமையில் பேதம், மத உரிமையில் பேதம் தமிழ் மாகாணங்கள் பொருளாதார ரீதியில் ஒதுக்கப்பட்டுவருகின்றது. ஏன்? சிந்தியுங்கள்.

தமிழன் சிறந்த அறிவாளி. அது மட்டுமா. சிறந்த தொழிலாளி. மழை, வெய்யில், குளிர் என்று பாராமல் இலங்கைக்கு வாழ்வளிக்கின்றார்கள் குடியுரிமையில்லாத மலையகத்தமிழர்கள். தமிழன் தன்மானத்துடன் வாழவேண்டும். இதை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்தால் ''தமிழ் ஈழம்'' உருவாகும்.

விவசாயத்தில் முக்கிய பங்கை வகிக்கும் தமிழ் மாகாணங்களை [illegible] சிங்கள அரசு புறக்கணிக்கின்றது! இலங்கை முழுவதுக்கும் வெங்காயம், மிளகாய், அரிசி மரக்கறி, புகையிலை 'மீன்' உப்புப் போன்ற பொருட்களை எமது தமிழ் மாகாணங்கள் தான் அளிக்கின்றன. எமது பகுதிகள் விருத்தியடைவதைக்கண்ட அரசு குடியேற்றத் திட்டம் என்ற போர்வையில் சிங்கள மக்களைக் குடியேற்றுகின்றது. இதை ஒவ்வொரு தமிழனும் உணரவேண்டும்.

தமிழ் மாகாணம் நீர் வசதியில்தான் பின்தங்கினாலும் நிலாவெளி நீர்த்திட்டத்தின்மூலமும் மகாவலிக்

புரட்சித்தமிழன்

(கொட்டாஞ்சேனை)

கிளையை விருத்தி செய்வதின் மூலமும் விவசாயர்தியில் பரிபூரணமடையமுடியும்.

அடுத்து பொருளாதார ரீதியை நோக்கினால், சீமெந்து, பெற்றோல், பேப்பர், கண்ணாடி, போன்ற பொருட்களை உற்பத்தி, செய்யின் எமது தமிழ் மாகாணங்கள் முன்னேறும் என்பதில் ஐயமில்லை. மூலப் பொருட்கள் பல இருந்தும் தொழிற்சாலைகள் இல்லையே. வெள்ளையன் ஆட்சியின்போது இலங்கையின் செல்வங்களை வாரிச் சென்றான். அவ்வாறுதான் இன்றைய சிங்கள அரசாங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள [illegible] கள் காலி, பத்தளம் பகுதியிலுள்ள [illegible] தொழிற்சாலைகளுக்கு வாரிச் செல்கின்றது.

தமிழ் மாகாணங்களில் பல சீமெந்துத் தொழிற்சாலைகளை உருவாக்கமுடியும். மீன்பிடித் தொழிற்சாலைகள் பல உருவாக்கமுடியும். பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை போன்று பல தொழிற்சாலைகள் நிறுவ முடியும். பணம்படைத்த தமிழன் இதைச் செய்ய முன்வந்தால் தமிழ் இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும். தமிழ் மாகாணங்கள் தலை நிமிர்ந்து நிற்கும்.

எமது தமிழ் மாகாணம் தந்த கனிப் பொருட்களை ஏற்றுமதி செய்யமுடியும். இலங்கையிலும் பார்க்க சிறியதான இஸ்ரவேலைப் பாருங்கள். நிலத்திலிருந்து பெறப்படும் பெற்றோல் மூலம் வல்லரசுகளில் முதலாவதாகத் திகழும் அமெரிக்காவே அதற்கு முழு ஆதரவையும் கொடுக்கின்றது. இதே பெற்றோல் எமது தமிழ் பகுதியின் தலைநகரில் பெறமுடியும். இதை ஏன் அரசாங்கம் புறக்கணிக்கின்றது? ஒவ்வொரு தமிழனும் விடாமுயற்சி எடுத்தால் எமது ''தமிழ் ஈழம்'' வல்லரசாகக்கூடத் திகழ முடியும்:

''பொங்கு தமிழுக்கு
இன்னல் விளைந்தால்
சங்காரம் நிசம் என்று
சங்கே முழங்கு''

என்றான் பாரதிதாசன்.

இதற்கு எடுத்துக்காட்டாகக் கடந்த இருபது வருடங்களாகப் பிரிந்திருந்த இரு

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரமங்கை செலீனு!

கலைநிதி

19-12-71 சுதந்திரனில் 'விடுதலைப்போருக்கு எனது காணிக்கை!' என்ற தலைப்பில் வெளியான வங்கத்துச் செய்தி எம் உள்ளத்தை உருக்கிவிட்ட அதே வேளையில் உணர்ச்சியையும் தூண்டிவிட்டது. வங்க விடுதலைப் போரில் எப்படியாக வீராங்கனை ஒருத்தி இராணுவத்தின் கோரப்பிடிக்குள் சிக்கியும் — தன்னை இழக்காது — துணிந்து எதிர்த்துப் போராடி — இறுதியில் அவனையும் கொன்று தன்னையும் — தன் இன்னுயுரையும் வங்க சுதந்திரத்திற்குக் காணிக்கையாக்கினாள் என்பதனை — எண்ணற்ற முறை படித்துப்படித்து உணர்ச்சி மேலிட்டால் அந்த வீராங்கனையை மையமாக வைத்து உருவாக்கப்பெற்ற இந்தக் கற்பனைக் கதையை வங்கத் தங்கை செலீனுவிற்கே சமர்ப்பணமாக்குகின்றேன்.

**காலை** மணி எட்டு சுவர் நேரம் காட்டி எட்டுத் தடவை தன் ஓசையை எழுப்பிவிட்டுத் தொடர்ந்து தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது. செலீனு நேரங் காட்டியை ஒரு தடவை ஏறிட்டு நோக்குகின்றாள் — மீண்டும் மீளாச் சிந்தனையில் ஆழ்ந்து விட்டாள். சிந்தனை — சிந்தனை — ஒரே சிந்தனை! தன் கடமைக்கு— பணிக்கு எல்லை வகுக்காது செயல்புரியும் நேரங்காட்டி பன்னிரண்டு தடவை அடித்து கடமையின் மகத்துவத்தை உணர்த்திச் செல்வதனை செலீனு உணர்ந்தாள். தன் கடமையின் இறுதிப்படியில் அவள் அன்று நின்றாள். ஆம் கடந்த மூன்று திங்களாக தன் உயிரையே பணயம் வைத்து-வங்கத்து உரிமைப் போரில் அவள் ஆற்றிய பணி அளப்பரியது. அந்தப் பணிக்கெலாம் — கடமைக்கெலாம் சிகரம் வைப்பது போல் இன்று அவள் மேற்கொள்ளவிருக்கும் செயல் அமைந்துள்ளது! அதனாற் போலும் மூன்று திங்களாக ஊண் உறக்கம் ஓய்வின்றிச் செயலாற்றிய அவள் இன்று சற்றே உடலிற்கு ஓய்வளிக்கின்றாள்!

தன் சிந்தனைக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்த செலீனு காலை நியமங்களை நிறைவுறுத்தி, வீரஉணர்வும் திடசித்தமும் புத்துணர்வும் புத்தொளியும் அஞ்சாமையும் தன் உள்ளத்தை ஆட்கொண்ட நிலையில் அந்த அறையின் மறு புறத்தை நாடிச்சென்று, நீர்த்திவலைகள் நிரம்பிய விழிகளால் சட்டம் போட்டு மாட்டப்பட்டிருக்கும் வங்கத்தின் தந்தையை விடுதலை வீரனை தங்கத் தலைவனை - தியாக மலையை - நோக்குகின்றாள். மடைதிறந்த வெள்ளமென அவளது வேல் விழிகள் நீரைச் சொரிந்த வண்ணமிருந்தன.

"தந்தையே! இராணுவ வெறியன் யஹ்யாகான் தங்களை எம்மிடமிருந்து பிரித்து மூன்று திங்கள் கடந்துவிட்டன. உங்கள் உருவத்தை எம் புறக்கண்களால் பார்ப்பதனை அவனால் தடுக்க முடிந்ததேயன்றி எம் அகக்கண்களில் தங்கள் உருவம் உலாவி வருவதனை அவனால் தடுக்க முடிந்ததா? தங்களால் பரப்பப்பட்ட கொள்கைகளை அவனால் தடுக்க முடிந்ததா? தங்களால் விதைக்கப்பட்ட விடுதலை வேட்கையை — சுதந்திர உணர்ச்சியை - அவனால் துடைத்தெறிய முடிந்ததா இன்று ஒவ்வொரு வங்காளியினதும் உள்ளத்தே கொழுந்துவிட்டெரியும் சுதந்திரத் தீக்கு இன விடுதலைத் தீக்கு அவனது தான்தோன்றித்தனம் எண்ணெய் ஊற்றிவருகின்றது. அந்தக் கயவனின் இரக்கமற்ற கட்டளைகளினால் மக்கள் எப்படியெல்லாம் துன்புறுத்தப்படுகின்றனர் என்பதனைத் தாங்கள் உணர்வீர்கள்!

"பச்சிளம் பாலகர்கள் பசியால் துடிதுடித்து இறக்க — பருவ மங்கையர் தம் கற்பினைக் காத்திடத் தம் உயிரையே பணயம் வைத்திட — இந்தக் கோரக் காட்சிதனை நோக்கிட முடியாதவர்களாய் - எம்முள்ளேயே எம் குலத்திற்கு இந்த இழி நிலையா என்ற ஏக்கத்தினால் தாய்க்குலம் தரணியில் வீழ்ந்து மடிய, தந்தையர் குலமோ, நம் பகைவரை விரட்டியடித்து-வங்கத் தலைவனை மீட்போம் தங்க வங்கமமைப்போம் — எம் உயிரனைய மொழிதனைக்காப்போம் — உலகிற்கு நாமோர் எடுத்துக் காட்டாக வாழ்வோம். என வீரப்பரணி பாடி — எமக்கு வேண்டியது சோறல்ல சுதந்திரம்! என்பதனை நாளுக்கு நாள் உணர்த்திக் கொண்டு வருகின்றனர்.

"வங்கத்தின் சிங்கமே! மூன்று திங்களுக்கு முன் வரை இந்த செலீனு துன்பம் என்றால் என்னவெனத் தெரிந்தவளல்ல. சிட்டுக் குருவிபோன்று சிறகடித்துத் திரிந்தாள். தாயைச் சிறு வயதிலேயே இழந்தமையினால் தாய்க்குத் தாயாகவும் தந்தைக்குத் தந்தையாகவுமிருந்து - அன்புடனும் ஆதரவுடனும் என் தந்தை என்னை வளர்த்தார். ஆண் மகவு இல்லாமையால் — பெண்ணிற்குப் பெண்ணாகவும் ஆணுக்கு ஆணாகவுமெண்ணி வழிநடத்தி வந்தார் என் தந்தை சாகிர் ஹுசேன். போலீஸ் மா அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற என் தந்தையவர்களோ ஒரு விடுதலை வீரர். உரிமைப்போர் தொடங்கு முன் ஒரு நாள்:-

கல்லூரி மாணவிக்குரிய துள்ளு நடையுடன் கலாசாலைக்குப் புறப்பட்டுக் கொண்டு வழக்கம் போல் - 'வாப்பா' போயிட்டு வர்ரேன். எனக் கூறி கால்களை முன்னேக்கி வைத்தேன்; மறுகணம், செலீனு இன்று கலாசாலைக்கு அவசியம் போகவேண்டுமா? என அவர் வினவக் கேட்டதும், துள்ளும் என் விழிகளை ஒருப்படுத்தி அவர் விழிகளை நோக்குகின்றேன். எதுவோ மாபெரும் திட்டம் உருவாகியுள்ள தென்பதனை அவர் முகமும் விழிகளும் பறைசாற்றின. சமய சந்தர்ப்பங்களுக்கேற்றபடி நாம் நடந்திடப் பழகவேண்டும் என்ற கோட்பாட்டினை என்னுள்ளத்தே பதியவைத்திட வேண்டுமென அவர் வற்புறுத்தி வந்தமையால் - அவரது உறுதியான அழைப்பினையும் - தீவிரமான கோரிக்கையையும்ஏற்றுக்கொண்டவளாய் அவர் இடம் நாடிய போது - கதவிற்குத் தாழிட்டுவா. என்ற அந்தக் கணமே எனது குழந்தையுள்ளம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது போன்றதோர் உணர்வு! உடலும் உள்ளமும் சிரிக்க - அவர்காட்டிய ஆசனத்தில் அமர்ந்து - கேள்விக்குறியுடன் அவரை நோக்குகின்றேன். அதனை உணர்ந்த அவர்.

"மகளே! உன் தந்தை எவ்வளவோ உறுதியுள்ளவன் - தான் கொண்ட கொள்கையை உயிரினும் மேலாக மதிப்பவன்; தியாகம் செய்யக் கற்றுக்கொண்டானே அன்றி — துரோகம் செய்யக் கற்றுக்கொள்ளவில்லை. உன்னை என் அன்பினாலும் அறிவினாலும் வளர்த்தேன். இன்று அந்த அன்பினை ஒருபுறம் அகற்றி உன்னை ஒரு விடுதலை வீராங்கனையாக என் கண் முன் நிறுத்திவிட்டேன். அதனால் தந்தை - மகள் என்ற பாசத்தினை இன்றுடன் துண்டித்து எமது கடமைகளை மேற்கொள்வோம்! உரிமைப் போர் முடிந்து - நாமும் உயிருடன் இருந்தால் அந்தச் சுதந்திர வங்கத்திற்கு வெற்றி விழாவெடுக்கும் வேளையில் மீண்டும் எம் உறவினுக்குத் திரும்புவோம்" எனக்கூறி நிலத்துடன் நிலமாக விருந்த அவ்வறையின் ஒரு பகுதிக்கு அழைத்துச் சென்று நிலவறைக்குள் புகுந்தார்.

அங்குள்ள அச்சுயந்திரம் பற்பல வேடங்கட்குரிய அணிகள் - மாற்றுப்புகள் துண்டுப்பிரசுரங்கள் — சுவரொட்டிகள் அனைத்தையும் காட்டிவிட்டு - இறுதியில் உங்களது இந்த நிழற்படத்தின் முன் என்னை அழைத்து வந்தார். அந்த இடத்தில் அசல் கடமை வீரனாகவே அவர்காட்சியளித்தார். செலீனு, உன் உடலில் உள்ள ஒவ்வொரு துளி இரத்தமும் வங்க சுதந்திரத்திற்கே என எங்கள் தங்கத் தலைவன்மீது ஆணையிட்டுக்கொள்." இவற்றையெலாம் எதற்காக உனக்குக் காண்பித்து வந்தேன் என்பதனை ஓரளவு புரிந்து கொண்டிருப்பாய்! ஆம்! எமது உரிமைப்போரில் உனக்குரிய பங்கு இவை இவற்றைவிட மேலும் உன்னால் பணிபுரிய முடியுமானால் நிட்சயமாக உன்னைப் பெற்றவன் ஒரு தியாகி —! நாடகங்களில் பல வேறுபட்ட பாத்திரங்களையேற்று நடித்திருக்கின்றாய்! உன் நடிப்பாற்றல் பலராலும் பாராட்டிப் புகழப்பட்டதே! இறுதியாக அண்மையில் நீ நடித்தது பலராலும் பாராட்டப்பெற்ற 'தியாகதீபம்' என்ற நாடகத்தினுக்குத் தலைமை தாங்கிய வங்க பந்து முஜிபுர் அவர்கள் அளித்த பாராட்டு? நீயேற்று நடித்த நாயகன் பாத்திரத்துடன் அவரே ஒன்றி உணர்ச்சிப் பிழம்பாகி விட்டாரென்றால்? அவர் அதனைப் பாராட்டிப் பேசியபோது;

"இந்த நாடகம் — தரம் சாய்ந்த கதையமைப்பினால் வெற்றிக்கொடி நாட்டியுள்ளதா? அன்றி— நாயகனின் உயிரோட்டமான சிறந்த நடிப்பினால் கொடிகட்டிப் பறக்கிறதாவென ஐயமேற்படுகின்றது! ஆனால், நாயகனின் [illegible] கூடிய உயிர்த்துடிப்பான நடிப்பினாலேயே இந்த நாடகம் வெற்றிபெற்றுள்ளது என்பதனைத் திடமாகக் கூறுவேன்! எம் தங்க வங்கம் சுதந்திர மடையவேண்டுமானால் வங்கத்து இளைஞர்கள் அனைவரும் தியாக தீபத்தின் கதாநாயகன் சலீமாக மாறவேண்டும் 'அனார்க்கலி' நாடகத்தின் நாயகன் சலீம் தன் காதலிக்காக உயிர் நீத்தான். ஆனால் 'தியாக தீபத்'தின் நாயகன் சலீமோ— தன் நாட்டின் மேல் கொண்ட காதலுக்காக— தன் மொழி மீது கொண்ட காதலுக்காகத் தன் உயிரை அளித்துத் 'தியாகதீபம்' ஆகினான்! நாயகன் வேடம் தாங்கியது ஒரு மங்கையென்பதறிந்து ஏமாற்றமடைந்தேன். ஒரு இளைஞன் என்ற எண்ணத்தில்—எமது விடுதலை இயக்கத்தினை வழி நடாத்தும் பொறுப்பினை இந்த மேடையிலேயே அந்த இளைஞனுக்களிக்கவிருந்தேன்: அத்தகைய உயிர்த் துடிப்பாயமைந்திருந்தது நடிப்பு. நானே உணர்ச்சிப் பிழம்பாகி விட்டேன்! ஆனாலும் — இன்றைய உலகில் ஆண்களுக்குப் பெண்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதனை—எம் அயல் நாடாம் பாரதத்தில் நடந்து வரும் பெண்ணாட்சியொரு பொன்னாட்சியாக இருப்பது தக்கதோர் உதாரணம்! எனவே —சமயம் வரும் போது— தைதங்களின் நங்கை செலீனு தன் நடிப்பின் ஒரு பகுதியையாகுதல் நாட்டிற்காக அர்ப்பணிப்பாள் என எதிர்பார்க்கிறேன்."

என்றார் அல்லவா? இந்த நிகழ்ச்சி இன்றும் என் நினைவில் பசுமையாகவே இருக்கின்றது! ஏன்? உனக்கும் அப்படியே! நீ— அதனை உண்மை நிகழ்ச்சியாக மனதிற்கொண்டமையினாலேயே —உன் நடிப்பு அதில் அத்தனை தத்ரூபமாக அமைந்திருந்ததென்பதனை நான் அறிவேன். எனவே— அந்த நடிப்பினைச்செயலில் காட்ட வேண்டிய சந்தர்ப்பம் உன்னை நாடிவந்துள்ளது! உன் திறமையை அதில் காட்டிடுவாய்! அல்லா உன்னை ஆசீர்வதிப்பாராக! போராட்டத்தின் முதன் நாள் தைதங்கலின் படைவீரர்களை நானே வழி நடாத்திச் செல்லவுள்ளேன். நீ இந்த நிலவறையின் மறுவாசலை உபயோகித்துக்கொள்! கயவர்களால் இந்த வீடும் ஒரு நாள் தரைமட்டமாகலாம். எனவே—சகல வசதிகளுடனும்—பாதுகாப்புடனும் கூடிய இந்த நிலவறையை விட்டு நீ வீட்டிற்குச் செல்ல வேண்டாம். அது உனக்கு ஒரு சமயம் ஆபத்தாகவும் முடியலாம்." எனக் கூறிய அவர்— இறுதியாக— போர் முனைக்குச் செல்லும் சமயம் 'செலீனு! என்றும் உன் தந்தையின் மகளாக வாழ்ந்து கொள்; சென்று வருகிறேன், பகைவென்று வருகிறேன்! வெல்க வங்க தேசம்!' என முழங்கிவிட்டுச்சென்றார்! சென்றவர் இன்று வரை என்ன ஆனாரோ தெரியவில்லை! வங்கத்து விடுதலைக்காகத் தம் உயிரை அத்திவாரமாக்கிய கடமை வீரர்களின் பட்டியலில் அவரும் ஒருவராகியிருப்பார் என நம்புகின்றேன்.

தானைத் தலைவனே! அன்றிலிருந்து இன்று வரை எனது கடமைகளைக் கண்ணெனக் காத்து—போற்றி படிப்படியாக நிறைவுறுத்தியே வருகிறேன். எந்தெந்த வேளையில் சமயத்தில்—எந்தெந்த மாற்றுடைக்குள் புகவேண்டும்மோ அப்படிப் புகுந்து செயல்பட்டு வந்தேன். ஒரே சமயம் இராணுவத்தினருள் இராணுவ வீரனாகவும்— போலிஸாருள் போலிஸ் வீரனாகவும் மாற்றுடையில் புகுந்து அவர்கள் எம்மக்கள் மத்தியில் மேற்கொள்ளவிருந்த கொடுஞ் செயல்களை முறியடித்தேன்.

அத்துடன் நிற்காது —வங்கதேசம் வங்காளியர்க்கே! பஞ்சம் போக்கிட வங்கமமைப்போம்; வங்க மொழி எங்கள் மொழி! மொழியே எங்கள் உயிர்! உயிரைக் கொடுத்தும் மொழியைக் காப்போம்! உயிர் எமக்கு வெல்லமல்ல! சோறல்ல— சுதந்திரம் வேண்டும்! வெறியன் யஹ்யாகானே வெளியேறு! 'வங்க பந்துவை விடுதலை செய்! 'எங்கள் தலைவன் முஜிபுர் ரஹ்மான்! 'வாழ்க வங்க மொழி! வெல்கவங்கதேசம்! போன்ற இப்படியான துண்டுப் பிரசுரங்களை விடுதலை வேட்கை கொண்டு போராடும் உள்ளங்கள் மத்தியில் பரவவிட்டு மேன்மேலும் அந்த உள்ளங்களை உற்சாகப் படுத்தி — நானும் நின்று போராடியே வந்தேன்!

என் தந்தை எனக்களித்த அணிகலன்களுள் மிகவும் உபயோகப்பட்டது — உடல் அனைத்தையும் மூடியுள்ள இந்த கவசமே! இதன்மேல் சாதாரண உடையை அணிந்து கொள்வதென்றால் யாராலுமே கண்டு பிடிக்க முடியாதவாறு உள்ளது! எத்தனையோ துப்பாக்கிக் குண்டுகளின் நின்று இந்தக் கவசம் என்னைக் காத்துள்ளது. நேற்றுடன் எனது திட்டத்தின் முக்காற்பங்கும் பூர்த்தியாகிவிட்டது! எனது திட்டத்தின் முழு வெற்றி இன்றிரவு மேற்கொள்ளும் விடயத்திலேயே தங்கியுள்ளது! ஆம் தந்தையே! இன்றிரவு தைங்கலின் மாநகர சபை மைதானத்தில் இருக்கும் மணிக் கூண்டுக் கோபுரத்தில் சுந்தர வங்கத்தின் சுதந்திரக் கொடியைப் பறக்க விடப்போகின்றேன். இதில் நான் வெற்றியடைகின்றேனோ தோல்வி சொள்கின்றேனோ, தெரியவில்லை. வெற்றியடைந்தாலும் உயிருடன் இருப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை! நினைக்க முடியாவகையில் வெறியர்களின் கைகளில் சிக்கினால் அந்த வெறியர்களின் கைகள் என்னைப் பந்தாட இடங்கோடேன்! மாறாக பந்தாட முனையும் பாதகர்களை இந்தத் துப்பாக்கிக்குப் பலியாக்கிவிட்டு— வங்க சுதந்திரத்திற்கு அடிக்கற்களாக அமைந்த உயிர்களுடன் இவளது உயிரையும் அர்ப்பணிப்பாள்! என் உடலில் ஓடும் ஒவ்வொரு துளி சுதந்திர இரத்தத்தின் மீது ஆணை! எனக் கூறித் தன் கரத்தை கத்தி கொண்டு கீறி வீரத் தலைமகனுக்கு இரத்தத்திலகமிட்டாள்!

—அடுத்த இதழில் முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கும் சிறையா?

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு திருமண அழைப்பிதழ் வெலிக்கடை சிறையில் தடுப்புக் காவல் கைதியாக வைக்கப்பட்டுள்ள வண்ணை ஆனந்தனுக்கு அனுப்பப்பட்டது. அக்கடிதத்தை அவர் கையில் சிறை நிர்வாகம் கொடுத்ததாம். அம் மண மக்களுக்கு '' தமிழும் இனிமையும்போல் இணைந்து வாழ்க '' என்று தமிழில் தந்தியடிக்க விரும்பி வண்ணை ஆனந்தன் எழுதிக் கொடுத்தபோது சிறை நிர்வாகம் அவர் தந்தியடிக்கக்கூடாதென மறுத்துவிட்டதாம்.

தமிழனுக்கு சிறை ......! தமிழுக்கும் சிறையா ?

# ஆங்கில மோகம் தமிழனிடமிருந்து...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ற்கு, ஆங்கிலமொழி மூலம் சேர்ந்த தமிழ்ஊழியர்களும் ஒரு காரணமாகும். ஆங்கில மூலம் சேர்ந்த ஊழியர்கள் இன்று வரையிலும் தம் கையெழுத்தை அடிமைகள் போல ஆங்கிலத்திலேயே வைத்துக்கொண்டுவருகிறார்கள். தாம் சாகும்வரையும் இப்படியே ஆங்கிலத்தில் தான் கையெழுத்தைப் போட்டுக்கொண்டுவருவார்கள். அவர்களை ஆங்கிலப் பற்றிலிருந்து விடுவிப்பது மிகக் கடினம்.

இவர்களைப் பார்த்து புதிதாகச் சேர்ந்த தமிழ் ஊழியர்களும் தம் கையெழுத்தை ஆங்கிலத்திலேயே போட்டு வருகிறார்கள். அல்லது ஆங்கிலத்திலேயே தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற உணர்வை, ஆங்கில மூலம் சேர்ந்த தமிழ் ஊழியர்கள் மறைமுகமாகத் தூண்டி வருகிறார்கள் இந்நிலை மாற்றப்பட வேண்டும். சிங்களப் பிரசை தன் மொழியில் கையெழுத்திடுகிறான். எந்தப் பெரிய பதவி வகிக்கும் தமிழ் மகனோ அல்லது சிறிய பதவி வகிக்கும் தமிழ் மகனோ இது வரையில் முழு மனத்திருப்தியோடு தனது கையெழுத்தை தமிழில் வைத்திருப்பதாக கருத முடியாது.

தமது கையெழுத்தை தமிழில் வைக்க ஏன் பயப்பட வேண்டும்! இந்நாட்டில் அதற்கும் உரிமை இல்லையா? எனவே புதிய குடியரசு அமுலுக்கு வந்த பின்னர் எமது மொழிக்கு அரசியல் திட்டத்தில் உரிமை தரப்படவில்லை என உணர்ந்த பின்னரும் கூட இவர்கள் ஆங்கிலத்தில் கையொப்பம் வைப்பதை தொடர்ந்து செய்கிறார்கள். எனவே மேலதிகாரிகள் பதவி வகிக்கும் தமிழ் அரச ஊழியர்கள் தமது ஒப்பத்தை தமிழில் வைக்க முன்வரல் வேண்டும்.

இவர்கள் பதவியில் சேர்ந்தது ஆங்கில மொழியின் மூலமே என்றும், அரசாங்கத்துடனான தமது சேவை உடன்படிக்கைகள் எல்லாம் ஆங்கிலத்திலேயே இருப்பதாலும் அதனால் தாம் தொடர்ந்தும் ஆங்கிலத்திலேயே கையெழுத்து வைக்க வேண்டும் என்று சில தமிழ் அரசாங்க ஊழியர்கள் கூறுகிறார்கள். இவர்களைப் போலவே இன்று பெரிய பதவிகளில் இருக்கும் சிங்கள ஊழியர்களும் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் ஆங்கில மொழி மூலம் சேவையில் சேர்ந்தவர்கள் தம் கையொப்பத்தை சிங்களமொழியில் வைக்கிறார்களே! தெரியவில்லையா என்று கேட்டால் சிங்களம் அரசகரும மொழி ஆதலால் அதில் வைக்கலாம் ஆனால் தமிழ் அப்படியல்ல என்று பதில் கூறுகிறார்கள்.

அரசாங்க சேவையிலுள்ள அத்தனை ஊழியர்களும் தமிழில் கையொப்பம் வைக்கத் தொடங்கினால் அரசு ஆட்சேபிக்க முடியுமா? எந்த மொழியில் கையெழுத்து வைக்கவேண்டும் என்று தீர்மானிப்பது அவரவரின் தனிப்பட்ட உரிமை எனவே இதில் அரசு தலையிட முடியாது. எனவே இன்றைய நிலையில் எல்லாத் தமிழ் அரச ஊழியர்களும் தம் கையொப்பத்தை தமிழில் வைக்க முன் வரவேண்டும்:

தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கான மொழி வழித் தொழிற் சங்கங்கள் இது பற்றிய ஆலோசனைகளைத் தத்தம் உறுப்பினர்களுக்கு வழங்கவேண்டும். எல்லோரையும் தமிழில் கையெழுத்துப் போடும்படி தூண்ட வேண்டும்.

---

## காசி ஆனந்தனுக்கு பாராட்டு!

ஐந்து ஆண்டுகள் பட்டதாரி மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிய உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் புதிய குடியரசுக்கு விசுவாசப் பிரமாணம் செய்ய மறுத்து தமது அரச சேவைப் பதவியைத் துறந்துள்ளார். புதிய அரசியலமைப்பை எதிர்த்து பதவி துறந்த ஒரே ஒரு தமிழர் இவரே. இவர் தனது வாழ்நாள் முழுவதையும் தமிழுக்கும் ஈழத் தமிழகத்தின் விடுதலைக்கும் அர்ப்பணிப்பதற்காகவே தமது அரச பதவியைத் துச்சமாக மதித்துத் துறந்துள்ளார். மீன் பாடும் தேனுடாம் மட்டுநகர் பெற்றெடுத்த தமிழ் மகன் காசி ஆனந்தனின் முன்மாதிரியைப் பாராட்டி அவ[illegible]ம் அவரது பெற்றோருக்கும் நன்றி தெரிவிப்பதென 29.7.1972ல் வவுனியாவில் கூடிய அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தீர்மானித்திருக்கிறது.

# அயர்லாந்து நடத்திய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கும்-பயிற்சிக்கும் அச்சாரம் வழங்கியது.

காலங்கள் பல உருண்டோடின. அயர் மக்களின் போராட்டம் தீவிரமாகியது. சார்லஸ் போன்ற எஃகு உள்ளம் படைத்த பல புரட்டஸ்டன் மதத்தைச் சார்ந்தவர்கள் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கினார்கள். பார்னல் தேசிய எழுச்சிக்குத் தீவிர உருவம் கொடுத்தான். இங்கிலாந்து பாராளுமன்றம் முறையாக இயங்க முடியாத வன்முறைகளை உருவாக்கினான்.

### இப்புரட்சி எமக்குப் பயிற்சி

1872ம் ஆண்டு பிரதம அமைச்சராக இருந்த 'கிளாஸ்டன்' என்பவர் சமஷ்டி போன்ற ஓர் உரிமையை வழங்கத் தீர்மானித்தார். இராணுவம், கப்பல் படை, வெளிநாட்டுக் கொள்கை, சுங்கம் போன்றவைகளை இங்கிலாந்தின் நேரடி ஆதிக்கத்துக்குள் கொண்டு வர ''ஹோம் ரூல்'' மசோதா ஒன்றைக் கொண்டு வந்தார். ஆனால் இம்மசோதா தோல்வியடையவே கிளாஸ்டன் முதலமைச்சர் பதவியிலே இருந்து ராஜிநாமச்செய்ததைத் தொடர்ந்து மந்திரி சபையும் தோல்வி அடைந்தது இதனால் இங்கிலாந்து அரசியலிலே போட்டியும் பிளவும். அயர் மக்களும் தம் போராட்டத்தைத் தீவிரப்பபடுத்தினர். காலம் கனிந்தது. சுதந்திர அன்னையின் அரவணைப்பில் அயர் மலர்ந்தது.

இவ்விடுதலை வரலாற்றிலே இருந்து நாம் எதைத் தெரிந்து கொள்கின்றோம்? ஒரு இனம் விடுதலை அடைய 300 ஆண்டுகள் போராடியிருக்கின்றது — பல லட்சம் மக்களைப் பலியிட்டிருக்கின்றது. ஆனால் ஈழத்திலே நாம் இன விடுதலைகாண எத்தனை ஆண்டுகள் போராடியிருக்கின்றோம்? எத்தனை ஆயிரம் கல்லறைகளைக்காணிக்கையாக்கியிருக்கின்றோம்? எத்தனை முறை களம் கண்டிருக்கின்றோம்? எனவே உலக விடுதலை வரலாற்றில் நாம் தவழத் தெரியாத மழலைகள் தான். என்றாலும் எமது புனிதமான கொள்கையும்— பொறுமையும்— நம்பிக்கையும் நிச்சயமாக எமக்கு வெற்றியீட்டித்தரத் தவறாது என்றே செயல்படுவோம் — விடுதலைக்குப் போராடிய ஒவ்வொரு நாடும் மழலைப் போராட்டத்திலிருந்துதான் போராடி வெற்றி கண்டிருக்கின்றது:

# சோஷலிசமாம் சோஷலிசம்!

சோவியத் யூனியனிலுள்ள லுமும்பா பல்கலைக் கழகத்தில் உயர்கல்வி கற்பதற்கென ஒவ்வோர் ஆண்டும் மாணவர்கள்-ஸ்கொலர்ஷிப்பில் இங்கிருந்து அனுப்பப்படுகிறார்கள்.

இந்த ஆண்டு, 25 மாணவர்களுக்கு இந்த'ஸ்கொலர்ஷிப்' அளிக்கப்பட்டுள்ளது. இந்த 25 பேரில் 22 பேர் சிங்கள மாணவர்கள், ஒருவர் சிங்கள மாணவி—ஆக ஒரேயொருவரே தமிழர்.

சோஷலிசம் பூத்துக்குலுங்குவதாக கூறப்படும் சோவியத் ஸ்கொலஷிப் வழங்கப் படுவதில்கூட எவ்வளவு தூரம் இனப் பாரபட்சம் காட்டப்படுகிறது பார்த்தீர்களா?


## ஜெர்மன் சிகிச்சை தலைமை அலுவலகம்

96, ஸ்டேஸ் ரேட், கிரண்ட்பாஸ், கொழும்பு-14

பாவனையாளர்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய ஏமாற்று மருந்துகள் மூலம் மேற்கொள்ளப்படும் ஏமாற்று முயற்சிகளிலிருந்து எச்சரிக்கையாயிருங்கள்:

ஆஸ்த்மா மூல வியாதி, அண்டவாய்வு, விதை வீக்கம் காக்காய் வலிப்பு, சிறுநீர் குழாயில் ஏற்படும் நோவுகள், பாரிசவாதம், மாறாத நாட்பட்ட எக்சிமா, பற்றுப்படை, சொறி சிரங்கு, கரப்பான் போன்ற பல சரும வியாதிகள், பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் அதிகரித்தல், நாட்படுதல் போன்ற கோளாறுகள் இன்னும் பல வியாதிகளுக்கும் முற்றாக குணப்படுத்துவதற்கேற்ற மருந்து எமது ஹோமியோ தயாரிப்புகளே!

ஆஸ்த்மா நோயினால் மிகவும் அவஸ்தைபடுகிறீர்களா ?

உடன் சுகம்பெற கைகண்ட மருந்து!

### ஆஸ்த்மா "அம்போரம்" ஸ்பெஷல் "

எந்தவிதமான ஆஸ்த்மா நோயானாலும் முதல் ஒரு வேளை மருந்து பாவித்த மாத்திரத்திலிருந்து வலியையும், நீங்கள் படும் அவஸ்தையையும் உடன் போக்கி சுகத்தை அளிக்கின்றது. வருடக்கணக்கில் ஆயிரக் கணக்கானோர் இந்நோயினால் அவஸ்தைப்பட்டவர்கள் தற்பொழுது நிரந்தரமான பூரண சுகத்தைப் பெற்றுள்ளார்கள். '' அம்போரம் ஸ்பெஷல் '' சிறுகுழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் ஒரு சிறந்த நிவா[illegible].

480 துளிகள் ரூபா 40 /-
240 துளிகள் ரூபா 20 /-
120 துளிகள் ரூபா 10 /-

நீரழிவு , மூத்திரக் கல்லடைப்பு வியாதிகளுக்கு

### 'ஜித் 99' மருந்து

சிறுநீரில் சீனி, வெள்ளை வெட்டை, தீராத மதுமோகம், அதிக தாகம், உடல் மெலிவு, மூட்டுக்களிலுள்ள குத்து, வலி, உறுப்புக்களில் ஏற்படும் கடூரமான எரிவு, உஷ்ணம், உணர்ச்சி இல்லாமை போன்ற எந்த நீரழிவு வியாதியையும் தீர்க்க வல்ல ஒரு சிறந்த மருந்து. சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்குமென பரீட்சித்து தயாரிக்கப்பட்ட சிறந்த மருந்து. உண்மையானதும், மிகவும் வேண்டியதும்.

960 துளிகள் ரூபா 45 /-
480 துளிகள் ரூபா 25 /-

அம்போரம் ஸ்பெஷல்

வேறு எங்கும் விற்பனைக்கில்லை. இது P. M. என்ற வர்த்தகப் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கீழ் கண்ட முகவரியில் மாத்திரம் பெறலாம்.

### பீனிசத்திற்கு பாவியுங்கள் " கைன்கா "

எந்த விதமான பீனிசத்திற்கும் ஒரு நிச்சயமான நிவாரணி

காலையில் தொல்லை தரும் இடைவிடாத தும்மல், மூக்கிலிருந்து நீர் கொட்டுதல், ஓயாத தலையிடி, ஆயாச அலட்சியம், தலைப்பாரம், முடி உதிர்தல், அல்லது நரைத்தல் முதலியன போன்ற பீனிசக் காரணத்தால் ஏற்படும் சகல வியாதிகளையும் குணப்படுத்த வல்லது. பரிபூரண பாதுகாப்பானது. தீங்கான விளைவுகளை உண்டுபண்ணாதது.

கைன்கா 480 துளிகள் ரூபா. 30-00, 240 துளிகள் ரூபா. 15-00
தபாற் செலவு சதம் 60

75 சத முத்திரையுடன் வரும் வி. பி. பி. ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வைத்திய ஆலோசனைகளுக்கு:

## ஜெர்மன் சிகிச்சை தலைமை அலுவலகம்

GERMAN TREATMENT HEADQUARTERS

96, ஸ்டேஸ்ரேட், கிராண்ட்பாஸ், கொழும்பு-14 தொலைபேசி: 35966

பணங்களும், கடிதங்களும் டாக்டரின் பெயருக்கே அனுப்பப்படவேண்டும்.

DR. P. M. SARATHCHANDRA J. P. M. D. H.

டாக்டர் பி. எம். சரத்சந்திர J. P., M. D. H. அமெரிக்கா M. H. S. லண்டன்.

...இடங்களிலும் எமது கிளைகள் கிடையாது.

...பிரசுரங்களைக் கொண்ட ''ஹோமியோபதி என்றால் என்ன'' என்ற இலவச புத்தகத்தைப் எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.



அருள் விருந்து

"பனையளவு பேச்சை விடத் தினையளவு செயல் சிறந்தது"

—தர்மசக்கரம்.

மில்க்வைற் சோப் ஆடைகளின் அழுக்கை மின்வேகத்தில் அகற்றுகிறது.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தன்னாட்சியை நிறுவிட அகிம்சைப் போர் தொடுப்போம்!

## உரிமைப்போரில் குதித்திட •சரியான வேளை இதுவே!

**நீ. மே. யோ. வேதநாயகம்**

சாத்தானின் அரசு அல்லது அரக்கர் இராச்சியம் என வருணிக்கக் கூடிய குடியரசு இலங்கையில் சென்ற மே மாதம் 22 ஆந் திகதி தொடக்கி வைக்கப்பட்டது. அதனை இறைவனின் அரசில் ( God's Kingdom ) அல்லது இராம இராச்சியத்தில் நம்பிக்கையுள்ள தமிழ் மக்கள் நிராகரித்து இழவு கொண்டாடிய நிகழ்ச்சி சிங்களவரின் வரலாற்றை என்றென்றுங் கறைப்படுத்திக் கொண்டேயிருக்கும். ஏற்றிய கறுப்புக் கொடியைப் பலவந்தமாக அகற்றிய செயல் 'பூனை கண்ணை மூடிக் கொண்டு உலகமே இருண்டு விட்டது' என்று நினைப்பது போன்ற முட்டாள் தனமாகும்.

இப்போது அதிகாரமெல்லாம் சிங்கள ஆதிக்கம் நிறைந்த மத்திய அரசிடங் குவிந்து இருக்கிறது. குடிஆட்சி எனப்பட்ட போதும் குடிமகனிடம் அதிகாரம் எதுவுமேயில்லை. கிராமங்களிலுள்ள குடிமக்களுக்குப் பரவும்போதுதான் அதனை, உண்மையான குடியரசு எனலாம். எனவே இன்னும் உண்மையான குடியரசு உதயமாகவில்லை.

இன்று எல்லாக் குழப்பங்களுக்குங் காரணமாயிருப்பது அதிகாரம் பிரதமரிடம் குவிந்திருப்பதேயாகும். சனநாயக வழிகளைக் கோணல்களாக்கி அதிகாரத்தை ஒரு கட்சி தன்வசம் வைத்துக் கொண்டு, அதிகார சின்னத்தைப் பேரவா நிறைந்த ஒரு பிரதமரிடம் ஒப்படைத்து விட்டுக் குடியாட்சி என்று நாமஞ் சூட்டி மக்களைப் பேய்க்காட்டுகின்றது.

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்க மொழியை ஒரு பிரச்சினையாக்கி அதிகாரத்தை எளிதில் கைப்பற்றிக் கொண்டார். இது ஓர் இரண்டாந்தர அரசியல் வாதியின் செயலாகுமன்றி ஓர் அரசியல் வல்லாளனின் ( Statesman) செயலாகாது. வடிகட்டிய வகுப்புவாதியான பண்டாரநாயக்காவைத் தேசபக்தன் என்போர் அறியாதோரே.

கணவன் இரண்டு அடி பாய்ந்தார், ஆனால் விதவையோ எட்டடிபாய்கிறார். பண்டாரநாயக்காவிடம் காலத்துக்கேற்ற கல்வியறிவு இருந்த போதிலும், அதிகாரத்தைக் கைப்பற்றக் கயமை மிக்க வகுப்புவாதக் குட்டைக்குள் இறங்கினார். அதிகாரப் பசி பிடித்த அவர் மனைவி மொழிப் பிரச்சினை என்னும் வகுப்புவாதச் சேற்றில் புதைந்திருப்பதில் வியப்பு இல்லை.

அதிகாரக் குவியல் மத்தியில் இருப்பதால் மொழிப் பிரச்சினை, படித்தவர்களின் பிரச்சினையாக, உத்தியோகப் பிரச்சினையாக இருக்கிறது. மக்களின் வயிற்றிலடிக்கும் பிரச்சினை, மக்களின் மானத்தை வாங்குகிறது, அதிகாரம் மக்கள் கைக்குப் பரவுமாயின் மாத்துறையிலிருந்து மாதோட்டம் வரை மக்கள் ஒருவரோடொருவர் இயல்பாகத் தொடர்பு கொள்வதற்கு முயலும்போது உண்மையான மொழிப்பிரச்சினை மக்கள் பிரச்சினையாக மாறும். சட்டத்தின் உதவியின்றி மக்கள் மொழிப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வர்.

அதிகாரம் பரவலாவதினால் நிர்வாகமும் பரவலாகிவிடும். இன்று அதிகாரத்தோடு நிர்வாகமும் குவிந்து கிடப்பதால், நிர்வாகத்திற்கு ஆகுஞ் செலவு கொஞ்ச நெஞ்சமல்ல. மத்தியில் அமைச்சுகளின் நிர்வாகத்துக்கு ஆகுஞ் செலவு ஆக்க வேலைகளுக்கு ஆகுஞ் செலவிலும் அதிகமாயிருக்கும். சுண்டங்காய் காப்பணம், சுமைகூலி முக்காப்பணம் என்பது போலவே நிர்வாகம் நடைபெறுகிறது.

இலங்கையில் மொழிப் பிரச்சினையைத் தொடக்கி வைத்த பண்டாரநாயக்கா மக்களின் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு நாட்டுக்குக் கெடுதியே செய்திருக்கிறார். மொழியென்பது கருத்தைப் பரிமாறும் வாகனமாகும்.

இலங்கை விடுதலைபெற்ற காலத்தில் நிருவாகம், உயர் கல்வி, நீதி, சட்டம் ஆகிய சகல துறைகளும் ஆங்கிலத்தில் நடைபெற்று வந்தன இவற்றைச் செவ்வனே செய்யப் பல்லாயிரக் கணக்கான இலங்கையரும் இருந்தனர். இருபத்தைந்தாண்டில் இளைஞர்கள் யாவரையும் ஆங்கிலப் புலமை உடையவர்களாக்கி இருக்கலாம். உலகிலுள்ள பல நாடுகளோடு நாம் கைகோத்துப் பவனி வரலாம். வெறும் வீம்புக்காகவே சிங்களம் அரச மொழியாக்கப்பட்டது.

உணர்ச்சி வழி சிங்களம் சிங்கள மக்களுக்குத் தேவையென்றால் தமிழும் தமிழ் மக்களுக்குத் தேவையென்பதை மறுக்கவும் முடியாது. சனத்தொகை விகிதாசாரக் கணக்கைப் பார்த்துச் சிறுபான்மையினரான தமிழர் பெரும்பான்மையினரின் மொழியைப் படிக்க வேண்டுமென்ற சுயநலவாதம் அடிக்கடி கேட்கப்படுகிறது. இலங்கையின் மொத்தமான சனத்தொகையில் சிங்களவர் அதிகமாயிருக்கலாம். ஆனால் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், புத்தள மாவட்டத்திலும் தமிழர் ( தமிழ் பேசுபவர்கள்) அதிகமாயிருப்பதை நாம் மறந்து போகக் கூடாது. சிங்களவர் தமிழுக்குச் சரிசம அந்தஸ்து தந்தாலன்றிச் சிங்கள—தமிழர் ஒற்றுமை ஒருபோதுமே உண்டாகாது.

சுயாட்சியை இலக்காகக் கொண்ட எமது போரைத் தொடுக்க இதுவே சரியான நேரமாகும். 'வாள் எடுத்தவன் வாளாலே மாள்வான்' என்பது கடவுள் குமாரனின் வாக்கு, தமிழர் தங்கள் ஆட்சியை இறைவன் கையில் ஒப்படைத்துக் குடியாட்சி நடத்தும் நோக்கத்தோடு அகிம்சைப் போரில் இறங்க வேண்டும்.

இப்போரின் முதற்படியாக மக்கள் தலைவர்கள், அறிஞர்கள் ஒன்று கூடிச் சாதிவேற்றுமையில்லாத் தமிழர் கூட்டமொன்றைப் பிரகடனஞ் செய்ய வேண்டும். அந்த நாள் தமிழ் ஈழம் முழுவதும் உண்மையான குடியரசு விழாவாகக் கொண்டாடப்பட வேண்டும் சாதியின் சின்னங்கள் ஒன்றுமே இருக்கப்படாது. நாம் எல்லோருந் தமிழர் என்று நம்மைப் பாராட்ட வேண்டுமன்றிச் சாதியின் பெயரால், தொழிலின் பெயரால் உயர்வு தாழ்வு பாராட்டப்படுதல் அழிந்து போக வேண்டும். தேசிய அரசுப் பேரவையைப் பகிஷ்கரிப்பதிலும் ஆக்க பூர்வமான நல்லொரு திருத்தத்தை உண்டாக்க வேண்டும். போதனை போதும், சாதனை தேவை, வெறும் பேச்சை நிறுத்திவிட்டுச் செயல்படத் தொடங்க வேண்டும். இது நமது சுயாட்சிப் போரின் அடிக்கல்லாக, மங்களகரமான சகுனமாக அமைய வேண்டும்.

## ஏழைக்கு வாழ வழியில்லை இந்த நாட்டில்!........

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்தும் செயலன்றி வேறென்ன?

இதையும் விடவேறொரு விசித்திரம் என்னவென்றால் யாராவது பகையாளி—எதிராளி தனது வஞ்சத்தைத் தீர்ப்பதற்காக தனது எதிரிகள் மீது பொலிசில் பொய் முறைப்பாடு செய்தால் அதில் உண்மையுண்டா—இல்லையா என்று ஆராய்ந்து பார்க்காமலே—அலசிப் பார்த்திடாமலே அவர்களைக் கைது செய்யலாம்! கைது செய்து சும்மா கொண்டு போவார்களா பொலிசார், யாழ்ப்பாணத்தில் அரசடி வீதியும், பிறவுண் வீதியும் சந்திக்கும் சந்தியடியால் பைசிக்களில் சென்று கொண்டிருந்தேன். அதனடியே ஜீப் வண்டியில் வந்திறங்கிய பொலிசார் அச்சந்தியில் நின்ற நாலு ஐந்து இளைஞர்களை அடித்து மிரட்டிவிட்டார்கள். காரணம்!...?

இதே போல் யாழ். பல்தொழில் நுட்பக்கல்லூரியடியிலும் நடந்துள்ளது. காரணம்...? யாரைக்கேட்பது? ஆம், நாம் சுதந்திரமாக நடமாடவே தடை.

எனவே நாடு சுதந்திரமடைந்து விட்டது என்பதில் எம்மால் எவ்வித அர்த்தத்தையுமே புரிந்து கொள்ள முடியவில்லை!!

இதையடுத்து இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையை ஆராய்வோமெனின் அது தீருவதற்குரிய அறிகுறி நாட்டின் எந்த மூலையிலுமே காணக்கூடியதாகவில்லை—தமிழர்களுக்கு நாட்டுப்பற்று இல்லை என்று கூறுகின்றனர் ஆட்சியாளர்கள்! தமிழர்களோ அரசியல் சுதந்திரம் அற்றவர்கள். ஒரு பகுதி தமிழர்கள் நாடற்றவர்கள்! மறுபகுதி தமிழர்கள் சந்தேகப் பிரசைகள். இப்படியிருக்கும் போது அவர்களிடம் எப்படி நாட்டுப்பற்றை எதிர்பார்த்திடமுடியும் ஆட்சியாளர்கள்!! (அப்படியிருந்தும் நாட்டின் வருமானத்தில் பெரும் பங்கை ஈட்டித்தருபவர்கள் இத்தமிழர்களே!)

ஒரு நாட்டில் சிறுபான்மை மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் பொருளாதார விடுதலை அடைவதென்றால்... அது பகற்கனவு! அப்படிப் பொருளாதார விடுதலை நாடு அடையவில்லையென்றால் அது பெரிதும் பாதிப்பது பெரும்பான்மை மக்களைத்தான் என்பதை இவ்வரசு நன்கு உணரவேண்டும்! இது உலக பொருளாதார வரலாறுகள் வடித்துத் தந்த உண்மை!!

இலங்கையில் பணமதிப்பு நாளுக்கு நாள் இறங்கி வருகிறது — அதாவது பொருளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஒரு நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் போதும் இவ்வாறு விலையேற்றம் ஏற்படுவதுண்டு. ஆனால் இலங்கையில் அப்படியல்ல! பொருளாதார அபிவிருத்தி ஏற்படுவதற்குரிய விலையேற்றமா இது! இதற்கு ஒரு சில பொருட்களின் விலையேற்றத்தை எடுத்துப் பார்ப்போம்.

அரசாங்கம் பங்கீட்டு முறையில் 1-60 சதப்படி 1றாத்தல் மிளகாய் விநியோகித்து வந்தது. ஆனால் அதன் விலையைத் திடீரெனக் கூட்டினால் மக்கள் கொதித்தெழுவார்கள் என்று எண்ணி மிளகாய் தட்டுப்பாடான காலத்தில் பங்கீட்டு முறையில் மிளகாய் இல்லை என்று கூறினார்கள் ஆட்சியாளர்கள்! இதனால் மிளகாயின் விலை வெளிச்சந்தையில் 8 ரூபா 10 ரூபா என்று ஏறத்தொடங்கியது! அடுத்து சில நாட்களின் பின் மிளகாயின் விலை வெளிச்சந்தையில் விசம்போல் ஏறுவதால் — அதிகரிப்பதால் அரசாங்கம் கூப்பனுக்கு 2-80 சதப்படி விநியோகிக்கப் போகின்றது என்று கூறினார்கள்!

இப்பொழுது இங்கே நடைபெற்ற நிகழ்ச்சியை எடுத்து ஆராய்வோமெனின் 1-60 சதத்துக்கு அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்ட மிளகாய் 4-80 சதத்துக்கு அரசாங்கத்தால் விநியோகிக்கப்படுகிறது. திடீரென 1-60 சதத்துக்கு விற்ற மிளகாயை 4-80 சதமாக உயர்த்தினால் மக்கள் குமுறி எழுவார்கள் என்ற காரணத்தில் இவ்வித்தையைக் காட்டினார்கள்.

அடுத்து—

சீனியின் விலை 72 சதமாக—கட்டுப்பாட்டு விலையாக இருந்து வந்தது. இதை கூப்பனுக்கு 72 சதமாகவும் விற்கப்படும் என்று கூறினார்கள்! (இது மறைமுக சீனியை விலையேற்றச் செய்த திட்டமே) இதை ஊர்ஜிதப்படுத்துவதாக ஒரு நாள் பத்திரிகைச்செய்தி அமைந்தது. அதன் படி கூப்பனுக்கு 72 சதம் வெளியில் 1-50 சதம் என்று இல்லாமல் எங்கும் ஒரு ரூபாவுக்கு வாங்க நடவடிக்கை எடுக்கப் படவிருக்கிறது என்பதே அச்செய்தி.

இப்படி ஒரு பொருளுக்கு விலை ஏற்றம் ஏற்பட்டால் அதன் [illegible] பொருட்களை மூலப்பொருட்களாக கொண்டு செய்யப்படும் பொருட்கள் விலை ஏறும். இதனால் இரட்டிப்பு விலையேற்றம் ஏற்படும்... இப்படியே சென்று கொண்டிருக்கும்!

எனவே பொருளாதாரப் பிரச்சினை நிமிடத்திற்கு நிமிடம் கூடிக்கொண்டு செல்கின்றது. இதற்கு உரமிடுவதைப்போன்று ஜனப் பெருக்கமும், வேலையில்லாப் பிரச்சினையும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இந்நிலைமை நீடிக்குமானால் பொருளாதாரப்பிரச்சினை தீர்க்கப்பட முடியாத ஒன்றாகிவிடும். அதன் பிரதிபலிப்பாக மக்களின் வாழ்க்கைத்தரம் குறையும்! மக்கள் கிளர்ந்தெழுவார்கள்! அமைதியற்றுத்திரிவார்கள்! வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டுவிடும்! இது நாட்டுக்கே ஆபத்தாக முடியும்!

எனவே இப்பிரச்சினை தீர்க்கப்பட முதலில் சகல மக்களுக்கும் அரசியல் விடுதலை கிடைக்கவேண்டும். சிங்கள — தமிழ் 'மக்களிடம் நல்லெண்ணம் வளரவேண்டும். இதை வளர்க்கவேண்டுமானால் தமிழருக்கும் கொடுக்கவேண்டிய நியாயமான உரிமைகளையாவது முதலில் கொடுக்க வேண்டும். தமிழ்க் கூட்டணியினர் சமர்ப்பித்த ஆறு அம்சக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கேற்ப சட்டங்கள் திருத்தப்படவேண்டும். அதுவும் அவர்கள் கொடுத்துள்ள கால அவகாசத்திற்குள் செய்து முடிக்கப்படவேண்டும். திருத்துவோம் நம்புங்கள்! என்று கூறுவீர்களேயானால் அல்லது அதைப் பாராமுகமாக இருப்பீர்களேயானால்...! காலம்தான் பதில் சொல்லும்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவும் ஒருவகை சோஸலிசம்

## ஐக்கிய முன்னணி ஆதரவாள ஆசிரியர் அனைவருக்கும் இடமாற்றம்

நமது ஆட்சியில் எல்லார்க்கும் நீதிவழங்குகின்ரும் என்று பேசிக்கொள்ளும் ஐக்கியமுன்னணி அரசினர் தமது ஆதரவாளர்களுக்கு ஒருமாதிரியும், ஏனையோருக்கு இன்னொரு மாதிரியுமாக நடக்கின்றனர். காய்ச்சலும் தலையிடியும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்றொரு பழமொழியுண்டு. அதை மெய்ப்பித்து வருகிறது தனக்கொருநீதி, பிறருக்கொரு நீதி வழங்கும் சோஸலிஸ அரசு.

ஆசிரிய இடமாற்றத் திட்டத்தில் எவர் தலையீடும் இருக்கமாட்டாது. இடமாற்றச் சபையே அதற்கு முழுவதும் பொறுப்பானது என்று கல்வி மந்திரி கரடியாகக் கத்துகிரூர். இதற்குப் பல அரசாங்க ஆதரவாளரும் வக்காலத்து வாங்கி 'ஆம் குருவே அது மெத்தச் சரிதான்' என்றும் துதிபாடுகின்றனர். கம்பியூட்டர் மூலம் ஆசிரியர் தெரிவு என்று கல்வி மந்திரி சொல்லி வாய்மூடுமுன் தீயில் மிதித்தவன் சங்கதியாக துள்ளி மிதித்தார்கள் அரசாங்க ஆதரவாளர்கள். தமது செல்வாக்குச் செல்லாக்காசாகிவிடும் என்று பயந்தே இத்திட்டத்திற்குக் குழிபறித்தனர். கல்வி மந்திரியும் தனது திட்டத்தை குற்றுயிராகவும் குலையுயிராகவும் வெட்டிப் புதைத்து விட்டார். இந்த ஒன்றே அரசாங்கத்தின் சுயநலத்தை அப்பட்டமாக எடுத்துக் காட்டப்போதுமானது.

இவற்றையெல்லாம் தூக்கி அடித்து விட்டது இன்னொரு சம்பவம். சில சட்டதிட்டங்களின் அடிப்படையில் இயங்கி வரும் இடமாற்றச் சபைக்கு முதுகில் குத்தி விட்டு, மாற்றங்களை நடாத்துகிறது அரசாங்கம் கஷ்டப் பிரதேசங்களில் 5ஆண்டுகளும், ஏனைய பிரதேசங்களில் 6 வருடங்களும் கடமையாற்றியோர் சொந்த மாவட்டத்திற்கு மாறிச்செல்ல முடியுமென்று இடமாற்றச் சபை கூறுகிறது. கஷ்டப் பிரதேசத்தில் நான்கு ஆண்டுகள் கடமையாற்றியும் சொந்த மாவட்ட மல்லாத இன்னொரு மாவட்டத்திற்குச் செல்லத்தானும் முடியாமல் ஆசிரியர் அவதிப்படுகின்றனர். வைத்திய அத்தாட்சிப் பத்திரமும் தூக்கி வீசப்படுகிறது.

இவை இப்படி இருக்க வெளி மாகாணங்களில் ஒரு வருடம் கடமையாற்றியோரும் தமது சொந்த மாவட்டத்திற்கு மாற்றப்பட்டு வரும் சங்கதி சந்தி சிரிக்கிறது. இவர்களுக்கிருந்த ஒரே ஒரு தகுதி ஐக்கிய முன்னணி அரசு ஆதரவாளர் என்பது மட்டுமே

### அப்பலோ

யாகும் இதனுல் ஐந்தாண்டு கஷ்டப்பிரதேசமும் அரகரா. ஆருண்டு மற்றப் பிரதேசமும் பளபளா.

மினிதேர்தல் அடுத்த மாதம் நடக்க இருக்கின்றதல்லவா? அத்தேர்தல் தொகுதிகளிலிருந்து பிற மாவட்டங்களுக்குச் சென்று கடமையாற்றும் அரசு ஆதரவாளரான ஆசிரியர் அனைவரும் சொந்த மாவட்டத்திற்கு உடனடியாக மாற்றம் பெறுகின்றனர். தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன். தட்டிக்கேட்டும் காதுகேளாத செவிடனுக அரசாங்கம் கருமமாற்றுகின்றது.

எங்கே? எப்போ? எப்படி? இடமாற்றம் யார் சொன்னது இப்படி? என்று கேட்கிறீர்களா? நுவரெலியா மாவட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் புத்தளம் தொகுதி ஆசிரியருக்கு 5-9-72 திகதியிடப்பட்டு கல்வி மந்திர காரியாலயம் ஒரு கடிதத்தை அனுப்பி வைத்திருக்கின்றது. அதில் ஜோர்ஜ் மெண்டிஸ் கையெழுத்திட்டிருக்கின்ரூர். இவர்தான் இடமாற்றச் சபைக்குப்பொறுப்பாக இருப்பவர்.

அக்கடிதத்தில் குறிப்பிட்ட ஆசிரியரை அவரது சொந்த ஊருக்கு இடமாற்றம் உடனடியாகச் செய்யும்படி கேட்கப்பட்டுள்ளது. இவ்வாசிரியரின் வெளி மாவட்ட சேவை ஒருவருடமேயாகும். தேர்தல் நடக்கும் தொகுதிகளிலுள்ள ஐக்கிய முன்னணி அபேட்சகர் மூலம் விண்ணப்பித்ததுடன் மாற்றம் கிடைக்கும் மந்திரி வித்தை வேறெந்த நாட்டிலும் நடைபெற மாட்டாது. இதுவும் ஒருவகைக் கைலஞ்சமோ என்று எதிர்கட்சி அபேட்சகர்கள் கருதுகின்ரூர்கள். சோஷலிசம் தலைகீழ் பாடமாக பாதாளத்தை நோக்குச் செல்கிறதைப் பாரீர்.

# தமிழுக்கு உலை! சிங்களத்துக்கு சிலை!

## தனித் தமிழ் பிரதேசமாம் தம்பிலுவில் பாடசாலைக்குத் தனிச் சிங்கள 'ணாய்'

கிழக்கின் தென்பகுதியாம் தம்பிலுவிலில் உள்ள மகாவித்தியாலயங்கள் உட்பட சில பாடசாலைகளுக்கு அரசாங்கத்தின் சிங்களத் திணிப்புக் கொள்கைக் கிணங்க அண்மையில் சில சிங்கள ஆ(சி)ரியர்கள்கல்வி அமைச்சினுல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் செய்யும் தமிழ் கொலைகளோ! ஏராளம், ஏராளம், தமிழுக்கு உலை வைத்து சிங்களத்துக்கு சிலை வடிப்பது தான் மாண்பு மிகு கல்வி அமைச்சரின் எண்ணமோ? மாணவர்கள் ஒழுங்காக தமிழ் கற்கமுடியாமலும், சிங்களத்தைக் கற்க முடியாமலும் நாளடைவில் தமிழை மறந்துவிடக்கூடிய சூழ்நிலையை ஆக்கித் தந்துள்ளார் அசல் அமைச்சர்.

இதனுல்தான் ஆரம்பத்திலே தடுத்தார்கள் தமிழரசார் புரிகிறதா? பதியூதீன் அவர்களே! அப்படியும் அவர்கள் தடுத்தும் கேளாது நியமித்தீர்கள் சிங்கள ஆசிரியர்களை. பாவம் அவர்களும் என்ன செய்வார்கள்? சிங்களம் சித்தியடைந்த தமிழர்கள் எத்தனையோ பேர்கள் இருக்க தமிழே தெரியாத இவ்வாசிரியர்களை அனுப்பியதன் மர்மம் என்ன? திட்டமிட்டு தமிழை அளிக்கும் நோக்கமா? அல்லது தமிழர்களின் கல்வியை மட்டம்தட்டவேண்டும் என்று செய்த சதியா? எது?

பரிதாபத்திற்குரிய சிங்கள ஆசிரியர்களின் தமிழ் கொலைகளை ஆட்சியாளர்களின் அடி சுறண்டிகளே! கேளுங்கள் (ஒ(ல)) 'வல்லா' என்னும் சிங்களச் சொல்லுக்கு அப்பாவிச் சிங்கள ஆசிரியர்களின் தமிழ் விளக்கம் 'ணாய்' என்பதாகும். இது மட்டுமா! ஆரம்பப் பாடசாலைகளில் ூ என்னும் சிங்கள எழுத்துக்கு அவர்களின் தமிழ் அரிச்சுவடியில் ''உந'' என்பதாகும். ''என் பெயர்'' என்பதுக்கு ''நான் பேர்'' என்றும் அழகான தமிழை அரிவாள் கொண்டு அரிகின்ரூர்கள்.!

தமிழின் இந்நிலையை எத்தமிழன் பொறுப்பான். இப்படித் தமிழும் சிங்களமும் புணர்ந்து புதுப்பிள்ளை பெறுவது தமிழுக்கு அவமானமாகும். இப்படிப் புணர்ந்து வந்து தமிழுக்கும் தூய தமிழுக்கும் பேதமறியாமல் இளம்நெஞ்சங்கள் தடுமாறுகின்றன. இவ்வாறு தினமும் இப்பாடசாலைகளில் நடைபெற்றுக்கொண்டு வருவது புரியுமா? அடிவருடிகளுக்கு? எப்படி புரியும் அடிமைகளுக்கு!

பல்கலைக் கழகங்களில்தான் தமிழுக்கு தலையிடி என்றுல் சாதாரண பாடசாலைகளிலும் பேரிடியா?

—தமிழமுதன்
தம்பிலுவில்.

# ஆளுங்கட்சி அடிவருடிகள் மண் கவ்வினர்! தமிழர் கூட்டணிக்குப் பெரு வெற்றி!!

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச்சங்க அதிகாரசபைத் தேர்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை 10-9-72 இல் காரைநகர் இந்துக்கல்லூரி மண்டபத்தில் மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் நடைபெற்றது. முன்னெப்பொழுதும் இல்லாதவாறு பெரும் திரளான அங்கத்தவர்கள் வருடாந்த பொதுக் கூட்டத்திற்குச் சமூகம் கொடுத்தனர். பல கிராமங்களுக்கான அதிகாரசபை அங்கத்தவர்கள் தேர்தலுக்கு நேரடிப் போட்டி இருந்தும் பெரும்பான்மை வாக்குகளால் கூட்டணி பிரமுகர்கள் வெற்றிவாகை சூடினர். பாராளுமன்றப் பொதுத்தேர்தலைக் காட்டிலும் கூடிய அக்கறையும் ஆர்வமும் காணப்பட்டது.

சில அதிகாரசபை அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். தேர்தல் நடந்த பல கிராமங்களுக்கும் பெரும்பான்மை அதிகாரசபை அங்கத்தவர்களாக தமிழர் கூட்டணிப் பிரமுகர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ் வைத்தியசாலை மாஜி தலைவரும் பண்ணுகம் மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபருமான சுதந்திரக் கட்சிப் பிரமுகர் திரு. வை. இராசசுந்தரம் அவர்கள் தந்திரமாக தேர்தலில் இருந்து விலகிக்கொண்டார்.

பரபரப்பான சூழ்நிலையில் நடைபெற்ற தலைவர் பதவிக்கு முதலியார். செ. சின்னத்தம்பி அவர்களும் கம்யூனிட் கட்சிப் பிரமுகர் திரு. எஸ். மகேசன் ஆசிரியர் அவர்களும் போட்டியிட்டனர். புதிய தலைவராக முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் 226 மேலதிக வாக்குகளால் வெற்றி வாகை சூடினர்.

வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு: ஆ. தியாகராசா அவர்கள், தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு படுதோல்வி அடைந்த திரு. எஸ். மகேசன் அவர்களை ஆதரித்து தீவிர பிரசாரம் செய்தார். திருமதி. தியாகராசா அவர்கள் காரைநகரில் வீடு வீடாகச் சென்று வாக்குக் கேட்டார் என காரைநகர் மக்கள் கூறினர். இவ் வைத்தியசாலைத் தேர்தலில் தளபதி அமிர்தலிங்கம் அவர்கள் தலையிடவில்லையென்பது குறிப்பிடத்தக்க முக்கிய நிகழ்ச்சியாகும். தேர்தல் [illegible] வாலிபர்கள், ''நீலக் கொடியை இறக்கி மூவர்ணக் கொடியை ஏற்றி விட்டோம்'' என மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இத்தேர்தல் முடிவு வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசாவுக்கு கிடைத்த பலத்த அடியென மக்கள் பேசிக்கொண்டனர். புதிய அதிகாரசபை அங்கத்தவர்கள் வைத்தியசாலையின் தற்போதைய அவலநிலையை புனருத்தாரணம் செய்து மீண்டும் மேல் நிலைக்குக் கொண்டுவருவார்கள் என்ற நம்பிக்கையுடன் அங்கத்தவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

### தேர்தல் முடிவுகள் இதோ :—

**வட்டுக்கோட்டை :** முதலியார். செ. சின்னத்தம்பி அவர்கள் திரு. தா. சிவகுருநாதன் இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர் திரு. மு. செ. கந்தையா இளைப்பாறிய தபால் அதிபர்.

**மூளாய் :** திரு. இ. தம்பையா ஜே. பி. திரு. ஆ. சின்னத்துரை.

**சுளிபுரம் :** திரு. எஸ். இராமநாதன் திரு. இ. சண்முகநாதன் திரு. வே. இராமநாதன்

**தொல்புரம் :** திரு. சோ. நரசிங்கம். ஜே. பி.

**பண்ணுகம் :** திரு. செ. ஸ்ரீ நிவாசன்.

**சங்கானை :** திரு. இ. செல்வரத்தினம் தலைவர், பண்டத்தரிப்பு பட்டினசபை

**மாதகல் :** திரு. நவரட்ணராசா ஜே. பி.

**காரைநகர் :** திரு. ச. சபாபதி இளைப்பறிய வித்தியாதிகாரி திரு. சி. கந்தையா திரு. எஸ். சோமசுந்தரம் திரு. எஸ். இளையதம்பி.

# வீர இளைஞனே தமிழ் காப்பாய்

— சக்தி பாலையா —

இன்னுமேன் பொறுமையடா — இளைஞா
எழுந்து வா போர்க்களத்தே
என்னதான் நேர்ந்துவிடும் — இளைஞா
இவ்வுயிர் பணயமடா.

சத்தியப் போராட்டம் — இதிலே
தாங்குவோம் துன்பமெல்லாம்

நித்தம் சுதந்திரத்தின் — பெருமை
நேர்மையின் திருவலவோ!

நமதினம் வாழ்வதற்கே — தமிழும்
நாட்டையும் ஆள்வேண்டும்

எமது உரிமை எல்லாம் — பறிப்போர்
எமதுறவாகுவரோ?

சுதந்திரம் வேண்டுமெனில் — நமக்கே
துணிவும் பலமும் வேண்டும்

சுதந்திரத் தமிழனென்றே — வாழும்
திறமும் பெறவேண்டும்

அச்சம் அகற்றிவிடு — துணிந்து
அறப்போர் களம் நடப்பாய்

இச்சகம் உனைப்போற்றும் — வீர
இளைஞனே தமிழ் காப்பாய்.

## தமிழ் ஈழம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் தமிழ் கட்சிகள் ஒன்று சேர்ந்து விட்டன. அதுமட்டுமா! அன்று பிரிவினையர்கச் சிலர் கருதிவந்த யாழ்ப்பாணத்துத் தமிழர், மட்டுநகர் தமிழர், முஸ்லிம் தமிழர் எல்லோரும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள்.

இவர்கள் தங்களை ''ஈழத் தமிழர்'' என்று கூறுவதில் பெருமை கொண்டுள்ளார்கள்என்பதில்சந்தேகமில்லை. 35 இலட்சம் தமிழ் மக்கள் ஏன் ''தமிழ்ஈழம்'' அமைக்க முடியாது? ஒரு இனம் இனி இல்லாத அளவிற்கு நசுக்கப்படுகின்றமையினுல் உருவாவதுதான் பூரண சுதந்திரம்'' இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவன தான் அயர்லாந்தும் வங்காள தேசமும் குடியரசுத் திட்டத்தின்மூலம் நாம் அடிமையாக்கப்பட்டு விட்டோம். இனி நாம் பூரண சுதந்திரம் அடைய நினைப்பதில் என்ன தவறு? தென்னுட்டுக்காந்தி அண்ணு கூறினுர். ''எமக்கு என்ன என்று சொல்லும் சுயநலமிகளும், நம்மால் ஆகாது என்னும் தொடை நடுங்கிகளும் வாழும்வரை எமது இனம் சுதந்திரத்தைப் பெறமுடியாது'' என்று!

இருப்பது ஓர் உயிர். அந்த உயிரையும் தமிழ் அன்னைக்கு அர்ப்பணிக்கத் துணிந்த என் வாலிப நண்பர்களே, தேசம் அமைக்கப் புறப்படுவோம். தமிழ்ச் சேனை திரட்டி அறப் போர்க்களத்தில் ஆடவாரீர். தமிழ்த்தாய்க்கோர் ஈழம் அமைப்போம். அதைத் ''தமிழ் ஈழம்'' என்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


# 5-வது வாரம் சிவாஜி திரைப்பட விழா!

# செல்லமகால் விரைவில்

இப்பொழுது காட்சியளிக்கிறது

சிவாஜி—பத்மினி
சௌகார்ஜானகி
நாகேஷ் நடித்த—

## பேசும் தெய்வம்

25-29

சிவாஜி—சரோஜாதேவி
நடித்த—

## அஞ்சல் பெட்டி 520

எம். எஸ். சுப்புலஷ்மி
ஜி. என். பாலசுப்பிரமணியம்
என். எஸ் கிருஷ்ணன்
துரைராஜா
நடித்த

## சகுந்தலை

எம். எஸ். சுப்புலஷ்மி
வை. வி. ராவ்
ஷாந்தா ஆப்டே
நடித்த

## சாவித்திரி

இப்பொழுது காட்சியளிக்கிறது

# சென்ட்ரல்

திரையில்

சிவாஜி ஜமுனா
நாகேஷ் எம். ஆர். ராதா
—நடித்த—

## நிச்சய தாம்பூலம்

# வெகு விரைவில்

சிவாஜிகணேசன்
ஜெயலலிதா
எம். ஆர். ஆர். வாசு
மனோரமா
வி. கே. ராமசாமி
—நடித்த—

## பட்டிக்காடா பட்டணமா?

4வது வெற்றி வாரம் கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ் நகர்) லிடோ (யாழ்நகர்)



அகில இந்திய சிறந்த நடிகர் விருது பெற்ற

## பாரத் எம். ஜி. ஆர்.

ஜெயலலிதா — அசோகன் — மனோகர்
லக்ஷ்மி — சோ
மற்றும் பலர் நடித்த

கே. சி. பிலிம்ஸ்

# குமரிக்கோட்டம்

இசை: எம். எஸ். விஸ்வநாதன்

(வண்ணச் சித்திரம்)

இயக்குநர்: ப. நீலகண்டன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ, இலக்கத்தில் 1972ம் வருடம் செப்டெம்பர் மாதம் [illegible] ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது;